
ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம;



நவநீதராம நவநீதம்.

— ஆசிரியர் —

ஸ்ரீ. உ. வே. வி. கோ. ஸ்ரீநிவாஸாசாரியார்,

தமிழ்ப் பேராசிரியர், இந்துமதப் பிரசாரகர்,
ஸ்ரீவிஷ்ணுசித்த ஸ்ரீவைஷ்ணவ சபைக் காரியதரிசி,
திருமலைவிஞ்சையூர் திருமலைதாதாசாரியக் குடிப்பிறப்பினர்,
எழுபத்துநான்கு சிம்மாசனாதிபதி,
23, 9/10 நாச்சியார் மேலமாடவீதி, ஸ்ரீவில்லிபுத்தூர்.

***


மதுரை: ஹரிஸமய திவாகரம் பிரஸில்
அச்சிடப்பட்டது.

—12—1962.

விலை 50 N. P.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



நவநீதராம நவநீதம்.

— ஆசிரியர் —

ஸ்ரீ. உ. வே. வி. கோ. ஸ்ரீநிவாஸாசாரியார்,
தமிழ்ப் பேராசிரியர், இந்துமதப் பிரசாரகர்,
ஸ்ரீவிஷ்ணுசித்த ஸ்ரீவைஷ்ணவ சபைக் காரியதரிசி,
திருமலைவிஞ்சையூர் திருமலைதாதாசாரியக் குடிப்பிறப்பினர்,
எழுபத்துநான்கு சிம்மாசனாதிபதி,
23, 9/10 நாச்சியார் மேலமாடவீதி, ஸ்ரீவில்லிபுத்தூர்.

மதுரை; ஹரிஸமய திவாகரம் பிரஸில்
அச்சிடப்பட்டது.

12—12—1962.

விலை 50 N. P.

— இந்நூலாசிரியர் —



ஸ்ரீ. உ. வே. வி. கோ. ஸ்ரீநிவாஸாசாரியார் ஸ்வாமி.

4-2

INTRODUCTION.

I got an advance copy of this small book of 34 pages entitled "Navaneetharama Navaneetham" from its learned author Sri V. K. Srinivasacharya Swami of Srivilliputtur. I read the book fully and found it very interesting and illuminating at the same time. The learned author had four months back published a book entitled "Srivaishnava Kappu" I read it with great interest and wished that other similar books should emanate from this erudite vidwan which would be of abiding interest and of great help to the Vaishnavite world. I felt glad when I read this book as the discussion of the various topics dealt with is of a high level and is impartial also.

The author has listed in this book 24 interrogatories to be answered by Sri Navaneetham Srirama Iyengar Swami of Uppiliappan Koil and at the end has himself given twenty essential points in consonance thereof. I read these very carefully with a critical eye and I found them to be unassailable. I am sure all right discerning people will easily realise this. But no benefit will acrue to people with dogmatic zeal whose vision will always be clouded. But then the world has to be told the truth and this has actuated the discerning author to bring out this book. This laudable object is certainly highly commendable and I feel very happy over this.

Numerous Vadagalai Srivaishnavites living in North Indian cities like Delhi, Bombay, Calcutta etc., on reading

this book very carefully, may come to realise that some or more of their anushtanams are of no use but in these days one cannot be sanguine about it.

The book contains apt quotations from "Srimad Rahasyathraya Sara" of Sri Vedantha Desikar which would be relishing to pundits and learned people. Another impor-feature is the author's reference to the commentary of 'Rahasyathraya Sara' by the late Sri Ahobilam Matathipathi Swami. I had not known about it and had occasion to read it only now. I find in some or more places the commentary is disappointing and is not in keeping with the great learning of that famous Matathipathy Swami. He has simply given the meaning for the Sanskrit slokas and Tamil pasurams quoted by .Sri Desika and has not attempted to explain or if possible reconcile the apparent contradictions and inconsistencies. In fact I feel there is really no difference between that commentary of the late Seitlur Narasimha-charya Swami of Thiruvaheendrapuram and the commentary of (Ingimedu Swami) the Ahobilam Matathipathy Swami. It looks as if the Matathipathy Swami only felt impelled to have a commentary by a votary of Madathu Sampradayam as there was one writren by a votary of Munithraya Sampra-dayam. The author of the present book will do well to deeply ponder over this and after research bring out another book which would be of very great utility to the vaishnavite public and I hereby voice this humble opinion of mine.


K. V. PARTHASARATHI,

Dalavoi Agraharam, MADURAI.

4-2

ஸ்ரீரஸ்து.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம;



நவநீதராம நவநீதம்.

இக்கட்டுரைக்கு நவநீதராம நவநீதம் என்று பெயரிட்டோம். இதன் பொருள் நாம் விவரித்தாலன்றி விளங்காததலால் விவரிக்கலாகிறது. நவநீதம் சீராமய்யங்காருக்கு நவநீதம் போல் பரம போக்யமான நூல் இது என்றவாறு. நவநீதம் சீராமய்யங்கா ரென்பவர் உப்பிலியப்பன் ஸன்னிதியில் வாழ்பவர். ஸ்ரீமத் வேதாந்த தேசிக சரித்திரத்தைப்பற்றி இவர் ஸமீபகாலத்தி லெழுதிய கட்டுரை யொன்று தேவஸ்தான பத்ரிகையில் (26–10–62ல்) வெளிவந்திருப்பதை யாவரும் பார்த்திருப்பீர்கள். அதைப்பற்றிச் சில பரிசீலனைகள் செய்ய அவசியமாயிற்று. அதனுல் இக்கட்டுரை எழுதலாகிறது. இது உலகுக்கெல்லாம் நவநீதம் போல் இனிதாயிருக்கும் முக்கியமாக அவர்க்கே இனிதாயிருக்குமென்கிற திடநம்பிக்கையினுல் நவநீதராமரான அவர்க்கு நவநீதமென்று கொண்டு இப்பெயரிட்டது சாலப்பொருந்தும்.

இப்பண்டிதரைப்பற்றி நாம் ஏற்கெனவே தெரிந்துகொண்டிருக்கிறோம். எப்படியென்றால், ஸ்ரீ உ. வே. காஞ்சீபுரம் ஸ்வாமியால் பிலவ-ஸு பங்குனி விசாகத்தில் வெளியிடப்பட்டுள்ள வேதாந்த தேசிக வைபவ மென்னும் நூலில் பக்கம் 8-ல் இவரைப் பற்றின ப்ரஸ்தாவம் வந்திருக்கின்றது. இவர் ஸமீபகாலத்தில் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் வெளியிட்டிருப்பதாகவும், அதிக தேசிக

சரித்திரம் சுருக்கமாக எழுதப்பட்டிருப்பதாகவுங் காட்டி அதில் தலைமேல் இவர் எழுதியிருக்கிற வாசகம்

> "ஸ்ரீ தேசிக சரித்திரம் பல்வேறு பதிப்புகளில் வெளிவந்துள்ளது: அவற்றில் நிகழ்ச்சிமுறை நடந்த இடம், காலம் முதலியவற்றில் சிறிது வேறுபாடு காணப்படுவது உண்மையே"

என்றிருப்பதாக எடுத்துக் காட்டப்பட்டு, அதற்குமேல் காஞ்சீபுரம் ஸ்வாமியால் சில வரிகள் எழுதப்பட்டிருப்பதாவது, இந்த நவநீத நண்பர் "தேசிக சரித்திரத்தில் வேறுபாடு காணப்படுகிறது" என்றெழுத வேண்டியிருக்க அப்படியெழுதாமல் '**வேறுபாடு காணப்படுவது உண்மையே**' என்றெழுதியிருப்பதற்கு காஞ்சீபுரம் ஸ்வாமி என்ன வியாக்கியானம் தந்திருக்கிருரென்றால் அவருடைய வாக்கியங்களையே உதாஹரிக்கிறேன் அவையாவன :—

> "அந்த நவநீதம் நண்பர் 1944 ஆம் வருஷத்தில் வெளியிட்ட தேசிகப்பிரபந்தவுரையில் D. R அட்வகேட் தேசிக சரித்திரமெழுதுகிற வியாஜமாகப் பூருவாசாரியர்களை தூஷித்திருந்தது காரணமாகவே விவாத நூல்கள் வளரத் தொடங்கின வென்பதை நாம் பலகால் பிரசுரித்திருக்கிறோம். உண்மையில் அந்த அதர்க்கணச் செயல்தான் விவாத வளர்ச்சிக்குக் காரணம் மேலே குறித்த நவநீதம் நண்பர் இதை நன்கு தெரிந்து கொண்டதனுல் உண்மையை இசைந்து கொள்வதுதான் உரியதென்று கொண்டு 'பல்வேறு பதிப்புகளில் வெளிவந்துள்ள ஸ்ரீ தேசிக சரித்திரத்தில் நிகழ்ச்சிமுறை நடந்த இடம் காலம் முதலியவற்றில் சிறிது வேறுபாடு காணப்படுவது உண்மையே' என்று எழுதினுர். அவ்வளவேயுமன்றிக்கே மேலே சரித்திரத்தில் பாதுகா ஸஹஸ்ரமவதரித்ததைப்பற்றி யெழுதுகையில் நவீனர்களின் கற்பனைக் கதைகளையும் D. R. கற்பனைக் கதையையும் அறவே யொழித்து நாம் பலகால் தெரிவித்திருந்த உண்மையைத் தழுவி உள்ளவாறெழுதியுள்ளார். அவரும் ஸங்கேத பீதியினுல் சில விஷயங்களை மட்டும் பழையபடி யெழுதியிருந்தாலும் பெரும்பாலும் பிராமாணிக வழியில் சார்ந்திருப்பது உகக்கத்தக்கது"

இவை காஞ்சீபுரம் ஸ்வாமியின் வாக்கியங்கள். அதை நாம் வாசித்த போது "நவநீதராமர் ஸங்கேத பீதியினுல் சில விஷயங்களை மட்டும்

பழையபடியே யெழுதியிருப்பதாக"த் தெரிவிக்கப்பட்டிருக்கிறதே, அவ்விஷயங்கள் யாவை? என்று தெரிந்துகொள்ள ஆவலிருந்தது. இப்போது மேலே குறித்த தேவஸ்தான பத்ரிகையினுல் சில விஷயங்களைத் தெரிந்துகொள்ள நேர்ந்தது.

ஒன்று மட்டும் முதலில் தெரிவிக்க வேண்டியதாகிறது. நவநீதராமர் எழுதுகையில் "ராமாநுஜருக்கு காச்மீரத்தில் ஸரஸ்வதி கொடுத்த ஹயக்ரீவவிக்ரஹம் அப்புள்ளார் ஸந்ததி வழியாக தேசிகனுக்குக் கிடைத்தது; அதையும் ஸ்ரீ தேசிகன் திருவாராதனத்தில் எழுந்தருளப்பண்ணிக்கொண்டார்" என்றெழுதியிருந்ததை தேவஸ்தான பத்ரிகாதிபர் உடனே அந்த இடத்திலேயே கண்டித்திருக்கிருர். அதாவது "பாஷ்யகாரருடைய திருவாராதனமூர்த்தி ஹயக்ரீவன் கிடாம்பியாச்சானிடம் போக ப்ரஸக்தியில்லையென்று நிர்ணயிக்கலாம்" என்று பத்ராதிபர் முடிவுகட்டியிருக்கிருர் இவ்விதமாகவே நவநீதராமருடைய அஸங்கத வார்த்தைகளையெல்லாம் பத்ராதிபர் தாமே அங்கங்கே உடனுக்குடனே மறுத்தொழித்திருந்தால் உலகுக்கு உண்மையுணர ஹேதுவாயிருக்கும்; என்போல்வார் தனியே இப்படியொரு நூல் எழுத அவசியமும் நேர்படாது. பத்ராதிபர் உபேக்ஷித்தது நவநீதராமருடைய அஸங்கதோக்திகளுக்கு விரிவான மறுப்பு வெளிவரவேண்டுமென்னுங் கருத்தினுலேயே யென்று ஊஹிக்கிருேம். ஒரு அஸங்கதத்தை மட்டும் தாம் காட்டினது "இப்படி பல அஸங்கதங்களிருப்பதை விவேகிகள் கண்டு கொள்ள வேண்டியது" என்று காட்டுதற்காகவென்பது திண்ணம்.

இங்கு நாம் நவநீதராமருக்குக் கண்டனமாக ஏதும் எழுத நினைக்கவில்லை. அவரை நல்ல விவேகியென்றும், கூடியமட்டில் ப்ராமாணிகரென்றும், காஞ்சீபுரம் ஸ்வாமி கொண்டாடியிருப்பதனுல் அவரை நோக்கிப் பல வினக்கள் கடாவுகின்றேனிங்கு. அவர் ஒரு வினவையும் விடாமல் எல்லாவற்றிற்கும் விடையிறுத்துவிட்டால் அதிலிருந்தே உலகம் உண்மை யுணர்ந்து கொள்ளுமாதலால் இந்நூல் முழுவதும் பெரும்பாலும் வினமயமாகவே நிற்கும். விடையிறுக்காமலிருப்பதோ அஸம்பத்தமான விடைகளையிறப்பதோ செய்யகில்லாரவர்.

ஸ்ரீ. உ. வே. நவநீதராமமரை நோக்கிய விஞக்கள்.

1. மிகவும் புராதனர்களான பெரியார்களைப்பற்றி சரித்திரம் தெரிவிக்க வேண்டுமாஞல் தகுந்த ஆதாரங்களைக்கொண்டு தெரிவிக்கவேண்டுமேயல்லது மனம் போனபடி யெழுதிவிடக்கூடாதென்பது உமக்குத் தெரிந்ததுதானே. 600 ஆண்டுகட்கு முன்பெழுந்தருளியிருந்த தேசிகருடைய சரித்திரத்தை நீர் எந்த ஆசாரியருடைய நூலை மூலாதாரமாகக்கொண்டு எழுதினீ ரென்பதைத் தெரிவிக்க முடியுமா ? வடகலையாருக்கும் தேசிகருக்கும் யாதொரு தொடர்பும் கிடையாதென்றும், கோவில் சண்டைகளுக்காக இழுத்துப் போட்டுக்கொண்ட ஸம்பந்தமே யொழிய வேறுவகையான ஸம்பந்தம் யாதொன்றும் கிடையாதென்றும் சிலாலிகிதம் செய்யப்பட்டிருக்கிறதென்றும் உமக்கு நன்கு தெரிந்ததுதானே. ஆகவே நீர் தேசிகருடைய சரித்திரத்தைப்பற்றி யெழுதுவதற்கு அதிகாரியே யல்லீர் என்பது ஸித்தாந்தமான விஷயந்தானே. ஆஞல் ஒன்றுண்டு. ஜகத்விக்யாதர்களான கவிகள் பண்டிதர்கள் ஆசாரியர்கள் ஆக இவர்களைப்பற்றி யாரும் பெருமைகளை யெழுதலாம். பூஞ, பாம்பே, கல்கட்டா, காசி முதலான நகரங்களில் ஆயிரக்கணக்கான புராதன நூல்களை ஸம்பாதித்து சோதித்துப் பதிப்பிக்குமவர்கள் நூலாசிரியர்களின் சரித்திரங்களை முன்னுரையாக எழுதி வெளியிடக் காண்கிறோம். எழுதுமவர்கள் அந்த நூலாசிரியர்களோடு ஒரு தொடர்பு உடையவர்களாயிருக்கவேண்டுமென்கிற நியதி யாதொன்றுமில்லை. உலகுக்குப் பேருதவி புரிந்தவர்களென்னும் காரணத்திஞல் லோகமாந்யர்களான மஹான்களின் சரிதைகளை யாரும் எழுதலாம். ஆஞல் ஸ்வச்சந்தமாக எழுதிஞல் அதற்கு மதிப்பு எற்படாதென்பதை நீர் அறிந்திருக்கிறீரா இல்லையா ?

2. தேசிகருடைய சரித்திரத்தை நீர் எந்த ஆதாரத்தைக் கொண்டு எழுதினீர் ? என்று கேட்டால் அந்த ஆதாரத்தைத் தெரிவிக்க முடியுமா ? காஞ்சிபுரத்திலிருந்த திருப்புட்குழியப்பா ஸ்வாமியின் சிஷ்யவர்க்கங்களும் திருவயிந்திரபுரம், சேட்லூர் நரஸிம்மாசாரியரும் முதலானவர்கள் "பிராசீனமான மூவாயிரப்படி குருபரம்பரை லோபித்து விட்டது; இப்போதுள்ள தேசிக சரித்திரங்கள் கல்பிதங்கள்" என்றெழுதி வெளியிட்டிருப்பவற்றைப் பார்த்திருக்கிறீரா இல்லையா ?

3. இவ்விஷயத்தில் ஒரே கேள்வியை முக்கியமாகக் கேட்டு விடுகிறேன். மைஸூர் பரகாலமடத்தின் மூலமாக "த்ருதீய ப்ரஹ்ம தந்த்ர ஸ்வதந்த்ரஸ்வாமி யருளிச்செய்த மூவாயிரப்படி குருபரம்பரா ப்ரபாவம்" என்றொரு நூல் தெலுங்கு லிபியில் பல வருஷங்களுக்கு முன் வெளியாகி இன்னமும் புதுமை மாறாமலேயிருக்கின்றதல்லவா? இதுதானே இப்போது வடகலை ஸம்பிரதாயத்திற்கு குருபரம்பரையாக விளங்குவது. இதிலிருந்துதானே முதன்முதலாக தேசிகருடைய சரித்திரம் வெளிவந்தது. இந்த புத்தகத்தை நீர் பிரமாணமாக வொப்புக்கொள்ளுகிறீரா? இஃது ஒன்றே நான் உம்மைக் கேட்பது. அப்புத்தகம் பரகாலமடத்திலிருந்து ஆயிரம் ரூபா செலவில் வெளியிடப்பட்டிருப்பது. அதை ஆதியோடந்தமாக வாசித்துப் பாரும். பார்த்திரானால் "நம்முடைய ஸம்பிரதாயத்திற்கும் ஒரு குருபரம்பரை இருக்கவேணும்" என்கிற ஆசை என்ன பாடு படுத்தியிருக்கிற தென்பதைத் தெரிந்துகொள்வீ ரெளிதாக. உம்மைப் போன்றவர்கள் இப்போது அஸம்பத்தம் அஸம்பத்தம் என்று கண்டிக்கிற விஷயங்கள் அப்புத்தகத்தில் எவ்வளவு நிரம்பியிருக்கின்றன வென்பதையும் அறிவீர். திருமங்கையாழ்வார் பெரியதிருமொழியில் "புதுத்தெய்வங் கொண்டாடுந் தொண்டீர்!" என்றழைத்திருப்பதற்கு நாமும் இலக்கானவர்களே யென்றும் சிக்கனக் கொள்வீர். அந்தப் புத்தகம் உண்மையில் யாரெழுதியது? எதற்காக எழுதியது? என்றைக்கு எழுதியது? என்னும் விஷயங்களை விமர்சித்து தேவஸ்தான பத்ரிகையிலேயே ஒரு வியாஸம் வெளியிட்டீராகில் உலகுக்குப் பேருதவியாகும். இப்புத்தகம் பிராமாணிகமா? அப்ராமாணிகமா? என்பதொன்றே இப்போது நமது கேள்வி.

4. வேதாந்தாசார்ய விஜயமென்கிற ஆசார்ய சம்பு எவ்வளவு கம்பீரமான நூல்! ஒன்றான தேசிகராலும் அத்தகைய நூல் இயற்றவியலாதென்று பல வித்வான்கள் பகரவில்லையா? அந் நூலின் மாதுர்ய கம்பீர்யாதிகள் ஒருபுறமிருக்க, ப்ராமாணிகத்வமன்றோ அதில் தலைசிறந்து விளங்குவது. இக்காலத்தில் தேசிகரைப் பற்றி நீங்கள் சொல்லி வருகிற அஸம்பத்தங்களான ஐதிஹ்யங்களுக்கும் சரித்திரங்களுக்கும் அந்த சம்பூக்ரந்தம் இடம் தரவில்லை யென்கிற காரணத்தினல்தானே அதை பிரசாரத்திற்குக் கொண்டு வராமல் மறைத்திட்டீர்கள். மறைத்தாலும் அது மறையுமோ? அது

தெலுங்கு லிபி தேவநாகர லிபிகளில் பிரசுரமாயிருக்கிறது அந்த சம்புவிலுள்ள கதைகளை யெல்லாம் ஸாரமாக வெடுத்து காஞ்சீபுரம் ஸ்வாமி பலகால் வெளியிட்டிருப்பதைக் கண்டபின்பு நீங்கள் அந்நூலில் மாச்சரியமும் கொள்ளத் தலைப்பட்டீர்களல்லவா ? இல்லை யெனின், தேசிக பக்தர்களென்று சொல்லிக்கொள்ளுகிற உங்களில் ஒருவரும் "அந்த சம்பூக்ரந்தத்தைத் தொடாமலும் ஸ்மரியாமலுமிருப் பதற்கு இன்னது காரணமென்று உண்மையாகச் சொல்லுவீரா ?

5. அந்நூல் ஸம்ஸ்க்ருதமாயும் கடினபாகமாயுமிருப்பதனாலே அதை உபயோகிக்கின்றிலோ மென்னில்; அஸ்து. அந்த நூல் பிராமாணிகந்தானென்றும், அதில் சொல்லப்படாத சரித்திரங்களை ஆதரிப்பது தவறுதானென்றும் ஒப்புக்கொள்ளுகிறீரா? அப்படி யொப்புக்கொள்ள முடியுமோ? 'அநுக்தம் அந்யதோ க்ராஹ்யம்' என்றில்லையோ? அதில் சொல்லப்படாத கதை வேறொரு நூலில் சொல்லப்பட்டிருந்தால் அதைக் கொள்ளலாகாதோ? என்பீர். ஏன் கொள்ளலாகாது? தாராளமாகக் கொள்ளலாம். அப்படிப்பட்ட நூல் ஒன்று இல்லையே. இருக்குமாகில் இதுவரை சொல்லியிருக்க மாட்டீர்களா? இப்போதாவது சொல்லுவீரா ?

ஆக 5. வினாக்களால் முடிவு பெற்ற விஷயம் என்னவென்றால் தேசிக சரிததிரத்தை உள்ளவாறு உணருவதற்கு ஆசார்ய சம்பு வொன்று தவிர வேறு எந்த நூலும் பிரமாணமல்ல வென்றும், அந்த சம்புவில் இல்லாத விஷயங்களைக் கற்பனை செய்து எழுதுவது லோக வஞ்சனையே யென்றும் முடிவு பெற்றது. வினாக்களுக்கு ஸரியான விடை வந்துவிட்டால் இந்த முடிவு மாறுபடும்.

இனி, மேன்மேலும் வினாக்களைக் கவனிப்பீராக.

6. தேசிகர் தூப்புல் கிராமத்தில் அவதரித்ததாக எழுதியுள்ளீர். இந்த கிராமம் தேசிகருடைய காலத்திற்கு வெகுகாலம் கழித்து ஏற்பட்டதே யொழிய தேசிகர் காலத்தில் இருந்ததில்லை தேசிகருக்கு மிகவும் பிற்பட்டவரான அப்பய தீக்ஷிதர் அங்கே வந்து வஸித்த போது தும்பைவனம் என்கிற அக்ரஹாரத்தை ப்ரதிஷ்டை செய்ய, அதன் கொச்சை நாமமாக துப்பல், தூப்பல், தூப்பில் என்றிப்படி வழங்கிவர ஆரம்பித்ததென்று அந்த தீக்ஷிதருடைய ஸந்ததியில்

தோன்றிய விச்வேச்வர தீக்ஷிதர் தாமெழுதிய அப்பய தீக்ஷித சரித்திரத்தில் வரைந்திருப்பதைப் பார்த்திருக்கிறீரா? அது எப்படியாவதிருக்கட்டும். தீபப்ரகாச ரென்கிற விளக்கொளி யெம்பெருமான் ஸன்னிதியின் வாசலிலுள்ள திருமாளிகைதானே தேசிகருடையது. அந்த இடத்திற்குத் திருத்தண்கா என்றுதானே ஆழ்வார்கள் சாற்றின திருநாமம். அந்தத் திருநாமத்தைத்தானே தேசிகரும் தீபப்ரகாச ஸ்தோத்ரத்தில் ஹிமோபவநமென்றும் சிசிரவனமென்றும் ஆதரித்திருக்கிறார். அந்தத் திருநாமத்தை விட்டு 'திருத்தண்காவுக்கு அருகிலுள்ள தூப்புல் கிராமத்தில்' என்று எதற்காக எழுதினீர்? "திருத்தண்காவின் நாமாந்தரமான தூப்புலில்" என்றெழுதியிருந்தாலாவது ஒருவாறு இசையலாம். திருத்தண்கா வேறு, தூப்புல் வேறு என்று காட்டியன்றோ எழுதிவிட்டீர். திருத்தண்காவின் ஸமீபத்தில் தூப்புலுள்ளதாக எழுதுகிறீர். எவ்வளவு ஸமீபமென்று தெரிவிக்க முடியுமா? உண்மையில் இது நிஷ்ப்பலமான கேள்வியே. தூப்புலென்கிற வியபதேசம் புராதனமாயிருந்தால் இது எத்தனையோ நூல்களில் ஏறியிருக்குமல்லவா? புராதனமான ஒரு நூலிலும் ஏறவில்லையேயிது. எந்த நூல்கள் கல்பிதங்களென்று தீர்ந்துவிட்டனவோ அந்தநூல்களில்தானே இது ஏறியிருக்கின்றது. அவற்றின் கல்பிதத்வத்தை மற்றும் பல விஷயங்கள் போலே தூப்பு லென்கிற சொல்லுமன்றோ அசைக்க முடியாதபடி ஸ்தாபித்துக் கொடுத்தது. காஞ்சியில் தீபப்ரகாசர் ஸன்னிதியருகில் தும்பைவனம் இல்லையென்றுவது, அதற்குத் தூப்பலென்கிற சிதைவு வழக்கு ஏற்படவில்லையென்றுவது உம்மால் பிரமாண பூர்வகமாக நிரூபிக்க முடியுமா? "திருமழிசை அண்ணாவப்பங்காரெழுதிய பழநடை விளக்கத்தில் தூப்புல் பிள்ளையென்றிருக்கிறது, காஞ்சீபுரம் ஸ்வாமியின் சில நூல்களிலும் தூப்புல் பிள்ளையென்றிருக்கிறது, தேசிகரால் ஆச்ரயிக்கப்பட்ட பிள்ளைலோகாசாரியரும் "சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான்" என்று பாடியிருக்கிறுரென்றும் இப்படிப்பட்ட வீண் பேச்சுக்களைப் பேசிக்கொண்டு கிடக்கலாமே யொழிய 300, 400 வருஷங்களுக்கு முற்பட்ட தென்கலையார்களோ வடகலையார்களோ எழுதிய ஸம்ப்ரதிபந்நமான நூல்களில் தூப்புல் ப்ரயோகம் ஒன்று காட்ட முடியுமா உம்மால்? வடக்குத்திருவீதிப்பிள்ளை, பெரியவாச்சான்பிள்ளை, திருவாய்மொழிப்பிள்ளை .... என்றிப்படி வழங்குமாபோலே நம் தேசிகரையும் பிள்ளையென்று வழங்கவேணு

மென்று நீங்கள் ஒருசமயம் ஆசை கொண்டீர்கள் : திருத்தண்காப் பிள்ளையென்றோ விளக்கொளிப்பிள்ளையென்றோ வழங்குவதில் ரஸ மில்லையென்று கண்டு தூப்புல்பிள்ளையென்று வழங்கத் தொடங் கினீர்கள் ; பிள்ளையந்தாதி யென்றும் கற்பனை செய்தீர்கள். அதற்கு முன் தூப்புலென்கிற சொல் ஒரு ஸ்ரீவைஷ்ணவ நூலிலாவது ஏறி யிருப்பதாகக் காட்டமுடியுமா உம்மால் ? ஏழேழ்பிறவி தவம் புரிந்தாலும் காட்டமுடியாது. இந்த தூப்புல் சொல்லை விட்டொழித் தால் வெகு க்ஷேமமுண்டு. ஆனால் எதையும் விடமாட்டீர்கள். பிடிவாதமென்பது பலியஸ்ஸாக இருப்பதால் அது தத்வார்த்த க்ரஹணத்தை வாழவொட்டாதன்றோ. 50 200 வருஷமாக ரூட மூலமானவற்றை இன்றாக விட்டுவிடுவதா ? என்று பார்க்கிறீர்களே யொழிய "தத்துவ முணர்ந்தபின் தகாதது தவிரவேணும்" என்கிற வுணர்ச்சி யுண்டாகவில்லையென்றால் விவேகத்திற்கு யாது பயன் ?

7. "தேசிகருக்கு வேங்கடேசர் என்று திருநாமம்" என் றெழுதுகிறீர். "வேங்கடேச விபச்சிதா" "வேங்கடேச கவி:" என்றிருந்தாலும் "ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய:" என்பது எவ்வளவு கம்பீரமானது ! 'வேங்கடநாதார்யரென்று திருநாமம்' என்றெழுதக் கை வரவில்லையே!. சண்டைத் தனியனை பாத்ரத்தனியனைக் கல்பனை செய்துகொண்டு பரமகம்பீரமான ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய தனியனில் பகை தோன்றியதன் பலனல்லவா இது ? சுலோகங்கள் கூடுவதற்காக "வேங்கடேசேந" என்று ஸ்வாமி ஸாதித்தது இல்லை யென்று யாரும் சொல்ல வருவாரில்லை. வேங்கடநாதார்ய திருநாமத் தின் காம்பீர்யத்தை யறிந்திலீரந்தோ !

8. "அப்புள்ளார் கிடாம்பியாச்சான் குமாரர்: கிடாம்பியாச் சான் ராமாநுஜருக்கு அந்தரங்க கைங்கரியம் செய்தவர்" என்றெழுதி யுள்ளீர். அந்தோ ! இது என்ன விபரீதம் ! கிடாம்பியாச்சானுடைய காலமெங்கே ! அப்புள்ளாருடைய காலமெங்கே ! அப்புள்ளாரை ஆத்ரேய பத்மநாபார்யஸுதரென்று ஒருபுறம் கோஷித்து வரு கிறீர்கள். கிடாம்பியாச்சானுக்கு பத்மநாபார்யரென்கிற திருநாம மிருந்ததாக எங்கேனும் கேட்டதுண்டோ ? ப்ரணதார்த்திஹர ரென்று உண்டு ; வேதாந்தோதயநரென்று உண்டு. பத்மநாபாசார் யர் ஆச்சானுக்கு நாலைந்து தலைமுறைகள் பிற்பட்டவர். அவ்வளவு வ்யவதான மில்லையென்று சொல்ல வருவீர். அப்புள்ளார் ஆச்சா

னுடைய திருக்குமாரரல்லரென்பது கல்வெட்டுதானே. இப்படிப் பொய்யும் புளுகுமாக மங்கரித்து எழுதுவது உமக்குத் தகுமா? என்ன லாபம் காண்பதாக இப்படி யெழுதினீர்?

9. ஹயக்ரீவ மந்த்ரமும் கருடமந்த்ரமும் தேசிகருக்கு எவ்வழி யால் கிடைத்தன வென்பதைப்பற்றி நவீனர்களின் நூல்களில் ஒருவிதமாக இல்லை. அவரவர்கள் தம் தம் மனத்தில் தோன்றினபடி யெழுதியுள்ளார்கள். நீர் உமது மனத்தில் தோன்றினபடி யெழுதி யுள்ளீர். ப்ரமாணானுக்ருஹீதமான அர்த்தத்தையே எழுதவேண்டு மென்கிற நியதியை உங்களினத்தவர்களில் ஒருவரும் வைத்துக் கொள்ளவில்லையன்றோ. "ஏவம் கிம் ந ஸ்யாத்" என்று முஷ்டி பிடிக்க முற்படுவீர்கள்.

10. "தேசிகர் திருவயிந்திரபுரத்தில் ஒஷதாத்ரியில் ஜபம்செய்து கொண்டிருந்தபோது கருடன் எழுந்தருளி ஹயக்ரீவ விக்ரஹத்தை நித்ய ஆராதனத்துக்காகக் கொடுத்துப் போனர்" என்று முன் பாராவில் எழுதிவிட்டு, "ஹயக்ரீவ விக்ரஹம் அப்புள்ளார் ஸந்ததி வழியாக தேசிகனுக்குக் கிடைத்தது" என்று பின் பாராவில் எழுது கிறீர். கருடன் கொடுத்தது மெய்யா? அப்புள்ளார் ஸந்ததி வழி யாகக் கிடைத்தது மெய்யா? என்று கேட்டால் இரண்டும் மெய்யே என்பீர். "அதையும் தேசிகர் ஆராதனத்தில் கொண்டார்" என்று நானெழுதியிருப்பதால் இரண்டு விக்ரஹம் தேசிகருக்குக் கிடைத்த தாகத் தெரிவித்திருக்கிறேனென்பீர். ஸ்ரீராமாநுஜர் தேசிகருடைய கனவிலே வந்து தமது காஷாயத்தையும் த்ரிதண்டத்தையும் ஹயக்ரீவ விக்ரஹத்தையும் கொடுத்து மறைந்தார்" என்று ஒருவர் எழுதி யிருப்பதை நீர் ஏன் கொள்ளவில்லை? அதையும் ஒருபுறத்தில் எழுதி வைத்திருக்கலாமே. இனி யெழுதும்போது இதையும் சேர்த்து எழுதுகிறீரா? பாஷ்யகாரரே தேசிகருடைய கனவில் எழுந்தருளின தாகமட்டும் மேலே எழுதியிருக்கிறீர். காஷாயம் த்ரிதண்டம் விக்ர ஹம் முதலியன கொடுத்துப்போனதை ஏன் எழுதாது விட்டிட்டீர்?

11. "ஸ்ரீ தேசிக சரித்திரம் பல்வேறு பதிப்புகளில் வெளிவந் திருப்பதில் நிகழ்ச்சிமுறை. நடந்த இடம், காலம் முதலியவற்றில் வேறுபாடு காணப்படுவது உண்மையே" என்று நீர் எழுதியிருப்பது உலகம் பரவிவிட்டது. இப்படியெழுதின நீர் பிராமாணிகமாகச்

செய்யவேண்டிய காரியம் என்னவென்ருல், "வேறுபாடு காணப் படும் விஷயங்கள் இவையிவை" என்று மகுடமிட்டு "இன்னின்ன விஷயங்களில் நிகழ்ச்சிமுறை வேறுபாடாகக் காண்கிறது; இன் னின்ன விஷயங்களில்--காலமும் ஸ்தலமும் மாருகக் காண்கிறது; இன்ன ப்ரமாணத்தின்படி இந்த மாறுபாடுகளை பிராமாணிகர்கள் இசைந்துதீரவேண்டும்" என்று விவரிக்கவேண்டிய காரியம் உமக்கு முக்கியமானது. இதைவிட்டு நிகழ்ச்சிமுறைகளை நீரே வேறுபடுத் திக்கொண்டும் அவற்றின் கால ஸ்தலங்களையும் நீரே மாறுபடுத்திக் கொண்டு மிருப்பது குலிங்கசகுனி கதையை நினைப்பூட்டுகின்றது. குலிங்கசகுனியைப் பற்றி தேசிகர் எழுதியுள்ளார். "ஸாஹஸம் மாகுரு, ஸாஹஸம் மாகுரு" என்று சொல்லிக்கொண்டே பறக்கு மாம் அப்பறவை. சிங்கமானது மாமிசங்களைத் தின்றுவிட்டு வாயைத் திறந்துகொண்டு உறங்கும்போது இந்த பக்ஷி சிங்கத்தின் வாயினுட்புகுந்து அதன் பற்களினிடையே கிடக்கும் மாமிச கண் டங்களைத் தின்றுவருமாம். இதுதான் குலிங்கசகுனி கதை. இந்த ரீதியில் நீர் செய்து போருவது அழகாகுமா ?

12. தேசிகருடைய ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரபிருதில் அஸூயை கொண்ட கொத்தனொருவன் வந்து ஒரு கிணறு கட்டிக் காட்டும் என்ன, தேசிகர் அப்படியே கட்டிக் காட்டினுர், அந்தக் கிணறு அப்படியே யிருக்கிறது—என்றெழுதியிருக்கிறீர். இதில் ஒரு முக்கிய மான விஷயம் விட்டுவிட்டீர். அது என்னென்னில்; தேசிகர் கிணறு கட்டிவிட்டார்; ஆனல், அதில் தண்ணீர் வரவில்லை; சில்பியை நோக்கி 'அப்பா! நீ கிணறு கட்டச் சொன்னபடி நான் கிணறு கட்டிவிட்டேன்; மழை பெய்தால் தண்ணீர் வந்துவிடும்' என்ருர் தேசிகர். தண்ணீரையும் இப்போதே காட்டவேணுமென்று வற் புறுத்தினுன் சிற்பி. தேசிகர் உடனே அவ்வூரிலுள்ள பக்தர்களை யெல்லாம் வரவழைத்துத் தாம் கட்டிய கிணற்றைக் காணும்படி நியமித்தார். ஒவ்வொருவரும் வந்து கண்டு 'ஆஹா! என்ன ஸாமர்த்தியம், என்ன ஸாமர்த்தியம்!' என்று சொல்லி ஆனந்தக் கண்ணீர் சொரிய அந்தக் கண்ணீர்மழையினுல் பாதிகிணறு நிறைந்து விட்டது; மற்றுஞ் சிலர் ஓடி வந்து 'இப்படிப்பட்ட மஹாநிபுண ரான மஹாகுருவினிடத்திலே அபசாரப்படுவாரும் சிலரே!' என்று சொல்லி சோகபாஷ்பம் சொரிய, அந்தக் கண்ணீர்மழையினுல்

கிணறு வாயால்வழியத் தொடங்கி விட்டது. இதை சிற்பி கண்டு வெகு ஆச்சரியப்பட்டுப் புகழ, அப்போது தேசிகர் சிந்தயந்தி விஷயமாக ஸ்ரீ விஷ்ணு புராணத்திலுள்ள "தச்சித்தவிமலாஹ்லாத க்ஷீண புண்ய சயா ததா, ததப்ராப்தி மஹாதுக்க விலீநாசேஷ பாதகா" என்கிற சுலோகத்தை ப்ரக்ருதோபயோகியாகப் பரக்க உபந்யஸிக்க, யாவரும் புலகாங்கிதரானார்கள் என்கிற ஸுப்ரஸித்த கதையையும் இனிமேல் சேர்த்துக்கொள்ளுகிறீரா?

13. ஸர்வதந்த்ரஸ்வதந்திரரென்கிற பிருது அப்பய தீக்ஷிதருக்கு மிருந்தது. அவரிடம் யாரும் போய் கிணறு கட்டுவீரா? கோபுரம் கட்டுவீரா? ஆயிரக்கால் மண்டபம் கட்டுவீரா? மணலால் மாட மாளிகை கட்டுவீரா? என்று கேட்டதாக ஒருவரும் எழுதி வைக்க வில்லை. பித்ரு ச்ராத்தத்தில் நிமந்த்ரிதர்கள் வஞ்சித்து விட்டார்களென்பதை மட்டும் தீக்ஷிதருடைய சரித்திரத்தில் எழுதி வைத்திருக்கிறார்கள். அதை அப்படியே எடுத்துக்கொண்டீர்கள். ஆனால் அக்கதையை நீர் எழுதவில்லையே ஏன் விட்டுவிட்டீர்? இது பரிஹாஸ்யமான கதையென்று தோன்றிவிட்டதா? ஏனப்படி தோன்றி விட்டது? வெள்ளை காக்கை பறக்க நான் கண்டேனென்று ஒருவர் சொன்னால் 'நானும் கண்டேன், நானும் கண்டேன்' என்று பலபேர் தாளம் போட வேண்டாமா?

14. தேசிகருக்கு முன்னே 'ஸமஸ்யாபூரண நிபுணர்' என்ற பிருதுடன் ஒரு பண்டிதர் விளங்கினார். எத்தனை ஸமஸ்யைகள் கொடுத்தாலும் அவர் ஒரே க்ஷணத்தில் பூர்த்தி செய்வராம். அவரிடம் ஒரு பண்டிதர் சென்று "அங்கம் குரங்கநயநாயா:" என்றொரு ஸமஸ்யையும், "தஸ்கர ஸுரதம் நமாமி தந்வங்க்யா:" என்றொரு ஸமஸ்யையும் கொடுத்து உடனே பூர்த்தி செய்து தரவேணுமென்றாராம். அவர் உடனே

"[illegible]
[illegible] ।
[illegible]
𑌕𑍁𑌰𑌙𑍍𑌗𑌨𑌯𑌨𑌾𑌯𑌾𑌃 ॥"

"ஶிஶிஶிஶி விஜொஷநயநம் ஸஹஸா
ஸஹஸெஷ ஶிஶிதொகாவெஷமபி ।
ஹாரா தலவஸிக்தஶாகும் தக்ஸாரஸாரதம்
நநாதி கஜம்ஷ்யா: ॥"

என்று பூரணம் செய்துகொடுத்தாராம். இவையிரண்டும் ரஸபுஷ்டி யோடிருந்தாலும் க்ராம்யமாக இருக்கிறது: தேசிகர் எப்படி பூர ணம் செய்கிருர் பார்ப்போம்! என்று அந்த பண்டிதர் இந்த ஸமஸ் யைகளை தேசிகரிடம் விஜ்ஞாபித்துப் பூரணம் செய்துதரக் கோரின ராம்; தேசிகர் கேட்டு மிகவும் வெறுப்புக் கொண்டார்; ஆனுலும் ஸமஸ்யாஸஹஸ்ரீ என்கிற தமது பிருது பழுது படாமைக்காகப் பூரணம் செய்தருள இசைந்து,

"காணவம் விவெகிவாஷ்யா வாக்ர
வாஷ்யாதா வாக்ரக்ணீயமபி ।
நாகாம்ஶாரதிதாநம் யிக்ஷுவெஷ்டஜும்
காரம்ம நயநாயா: ॥"

"உவஶி நாகொவயாயகஜிஹவொ
வுாவவவிஷாதிவிஷவீஜமபி ।
ஶிஷ ஜநமஹிஷ்தம் தக தக்ஸாரஸாரதம்
நநாதி கஜம்ஷ்யா: ॥"

என்று பூரணம் செய்து கொடுத்தருளினுரென்று ப்ரஸித்தம். காலஞ் சென்ற சதாவதானி. ஸ்ரீநிவாஸாசாரிய ரென்பவர், முந்தின ஸமஸ்யா பூரணங்களில் சப்தார்த்த புஷ்டியிருப்பதாகக் கண்டு, "தேசிகர் பரமைகாந்திகளில் தலைவரானுலும் விரக்தா க்ரேஸரரானுலும் பரம ரஸிக சக்ரவர்த்தி யாகையாலே அசட்டுத்தனம் சொட்டும்படியான ஸமஸ்யாபூரணத்தை ஒருகாலும் செய்துகொடுத்திருக்க மாட்டா ரென்றும், வேருெரு பண்டிதர் செய்ததாகச் சொல்லப்படுகிற பூரணங்களே தேசிகரால் செய்யப்பட்டவை யென்றும், கவிஸரணிக் குத் தகும்படியாகச் செய்வதனுல் அவருடைய பாரமைகாந்த்ய வைராக்யாதிகளுக்கு ஒரு கொத்தையும் வரமாட்டாதென்றும், இவ்விதமான பூரணத்தை தேசிகர் ஸ்வாநுபவமில்லாமல் எப்படி

செய்ய முடியுமென்று சிலர் க்ஷேபிப்பது விரஸமென்றும் "திசிதிசி விலோலநயநம்" "பநஸபலபீஜகோசாதபி" என்கிற சுலோக நசனைகள் தேசிகருக்குத் தவிர வேறு யாருக்கும் ஸாத்யமன்று என்றும் எழுதியிருப்பதைப் பார்த்திருப்பீரே, இதைப்பற்றி நீர் ஏன் ஒன்றுமெழுதவில்லை ?

15, அஸங்கதம், அத்யந்தமஸங்கதம், அதிதராமஸங்கதம் என்று மநஸ்ஸாக்ஷிகமாக நன்கு தெரிந்திருந்தும் "சட்டி சுட்டது, கை விட்டது" என்று விட்டுத் தொலைக்கவேண்டியிருக்க, இன்னமும் வெட்கக்கேடான அந்த விஷயத்தை விடாமல் பற்றிக்கொண்டு மன்ருடுகிறீரே ! இதுதான் வெகு ஆச்சரியம் ! அது என்னவென்ருல், "தேசிகன் திவ்யப்ரபந்த காலக்ஷேபம் செய்துகொண்டிருக்கையில் பிரம்மதந்திரஸ்வதந்திரஜீயர் பிரதாந சிஷ்யராயிருந்து அவருக்கு ராமாநுஜதயாபாத்ரம் என்ற தனியன் அருளிச்செய்தார்" என்றெழுதியிருக்கிறீரே ! இதனில் மிக்கோரயர்வுண்டே ? தேசிகர் பிள்ளானுடைய ஆருயிரப்படிக்கு விபுலவியாக்யானமாக எழுபத்திராயிரப்படி (அல்லது) எழுபத்துநாலாயிரப்படியான நிகமபரிமளம் ஸாதித்து அதை ப்ரவசனம் செய்துகொண்டிருந்தாரென்றும், அந்த நிகம பரிமளத்தில் ஆருயிரப்படிக்குப் பின்தோன்றிய ஒன்பதினுயிரப்படி, இருபத்துநாலாயிரப்படி, முப்பத்தாருயிரப்படி, பன்னீராயிரப்படி ஆகிய எல்லாப் படிகளிலுமுள்ள அபார்த்தங்களெல்லாம் கண்டிக்கப்பட்டு, அனேகவிடங்களில் ஆருயிரப்படியும் கண்டிக்கப்பட்டுத் தொலைந்துவிட்டனவென்றும் தேசிகப்பிரபந்தவுரையில் வெளியிடுவித்த நீர் இப்போது நிகமபரிமள ப்ரஸ்தாவமே செய்யாமல் வெகு ஸாதுவாய் விட்டீரே ! இது எதனுலே ? பொதுவாக "திவ்யப்ரபந்த காலக்ஷேபம் செய்துகொண்டிருக்கையில்" என்று இப்போது எழுதுகிறீர். தவிரவும், அந்த காலக்ஷேப கோஷ்டியில் ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்திரஜீயர் அந்வயிக்காமல் விலகியிருந்தாரென்றும், ஏன் நீர் விலகியிருக்கிறீரென்று பலர் கேட்க, 'நான் திருக்குமார வரதாசாரியரிடத்திலே காலக்ஷேபம் கேட்கவேணுமென்று விலகியிருக்கிறேன்' என்று சொல்லி, அப்படியே அந்த திருக்குமாரரிடம் திருவாய்மொழி காலக்ஷேபமோ திவ்யப்ரபந்தகாலக்ஷேபமோ நிகமபரிமளகாலக்ஷேபமோ ஆருயிரப்படி முதலான படிகளின் கண்டன காலக்ஷேபமோ தாம் கேட்டருளுகிற காலத்திலே ராமாநுஜதயாபாத்ரம் பணித்தாரென்

றும் கட்டின ஐதிஹ்யத்தை ஏன் அநியாயமாக விட்டுத் தொலைத்தீர். இதெல்லாம் உமக்கு இஹலோக நஷ்டத்தை மிகமிக விளைக்குமே கிடக்கட்டுமிது. இந்தத் தலைவிதிக்கு நீரும் அகப்பட்டுக்கொண்டீர். கேட்பவற்றுக்கு பதில் சொல்லும்.

16. ஸ்ரீசைலேசதயாபாத்ரம், ராமாநுஜதயாபாத்ரம் என்கிற தனியன்களைப்பற்றிக் கேட்கிறேன். இவ்விரண்டு சுலோகங்களையும் பார்க்கும்போது இரண்டும் ஒரேசாயலாக இல்லையா? ஒன்றைப் பார்த்து மற்றொன்று போட்டியாகச் செய்யப்பட்டதென்பதில் சந்தேகமுண்டா? எது முற்பட்டது, எது பிற்பட்டது என்பதை நிர்ணயிக்க உம்மாலாகாதா? கோயில் திருமலை பெருமாள்கோயில் முதலான ஸகல திவ்யதேசங்களிலும் தேசிகருடைய அவதாரஸ்தலத்திலுமுட்பட எந்தத் தனியன் விஜயஸ்ரீயோடு விளங்குகின்றதோ அதுதான் முற்பட்டதென்றும், எந்தத் தனியனைச் சொல்லவேணுமென்று நெஞ்சால் நினைக்கும்போதே தடையுத்தரவுகளும் தண்டனைகளும் கைமேல் கிடைக்கிறதோ அதுதான் பிற்பட்டதும் கல்பிதமுமான தனியனென்றும் நிர்ணயிக்க நீர்கூடவா அசக்தர்? ஸந்நிஹித விஷயமொன்று ஸாரமாகச் சொல்லுகிறேன் கேளும். திருப்பதியில் தேசிகருடைய மங்களாசாஸனக் கேஸ் என்று ஒரு விவகாரம் நெடுநாளாகத் தொடர்ந்து வருகிறது. அது முடிவாக ஹைதராபாத் ஹைகோர்ட்டில் இந்த நவம்பர் மாதத்தின் (1962) முதலில் தீர்மானிக்கப்பட்டது. நவம்பர் 5, 6, 7 தேதிகளில் வெளிவந்த இங்கிலீஷ் தெலுங்கு தமிழ் ஆகிய ஸமாசார பத்ரிகைகள் எல்லாவற்றையும் எடுத்துப்பாரும். பாருமென்று இப்போது நான் சொல்லவேணுமா? பார்த்தேயிருப்பீர். நியூஸ் பேப்பர்க்காரர்கள் எப்படியெழுதவேண்டுமென்றால் "திருப்பதி தேசிகர்கோவில் மங்களாசாஸன விஷயமாக வடகலையார் ஹைடராபாட் ஹைகோர்ட்டில் செய்திருந்த அப்பீல் கோர்ட்டு காஸ்டுடன் டிஸ்மிஸ் செய்யப்பட்டது" என்றெழுதியிருக்கவேண்டும். இப்படித்தான் ஒவ்வொரு கேஸின் முடிவையும் பிரசுரம் செய்வது வழக்கம். ஆனால் இப்போது ஷை தாவாவின் முடிவைப்பற்றிப் பிரசுரம் செய்திருப்பது அப்படியில்லை; பின்னை எப்படியிருக்கிறதென்னில், "தேசிகருடைய சடங்குகள் தென்கலையாசாரப்படிதான் நடக்கவேணுமென்று ஹைகோர்ட்டார் முடிவு செய்தார்கள்" என்று பிரசுரம் செய்யப்பட்டிருக்கின்றது. நடுநிலை

யில் நிற்கிற அதிகாரிகள்—லஞ்சம் வாங்காமலும் சிபார்சு கேளாமலும் முடிவு செய்யக்கூடிய அதிகாரிகள் ரிகார்டுகளைப் பரிசீலனை செய்து இப்படி யெழுதுகிறார்களென்பதைப் பார்த்துங்கூட "தேசிகர் வடகலைகுரு, தேசிகர் வடகலையாசாரியர்" என்று உம்மைப்போன்றவர்கள் சொல்லிக்கொண்டிருப்பதைப்பற்றி அந்தோ! என்ன சொல்லுவது! "மணவாளமாமுனிகளின் சடங்கு வடகலையாசாரப்படிதான் நடக்கவேணும்" என்கிற பேச்சு ஜம்பூத்வீபத்தில் பரதகண்டத்தில் ஓரிடத்திலாவது தலைகாட்டுமா? அப்படி ஒரு பேச்சு கிளம்பினால் ஒரு தென்கலை வைஷ்ணவராவது அந்த மணவாளமாமுனியை யணுகுவரா? அணுகுவர், அணுகார் என்பதிருக்கட்டும்; முதலில் அந்தப் பேச்சு கிளம்புமா? நம்முடைய ஸம்பிரதாயத்தில் எத்தனையாழ்வார்கள், எத்தனையாசாரியர்கள். ஒரு ஆழ்வாருடைய அவதாரஸ்தலத்திலாவது, ஒரு ஆசாரியருடைய அவதாரஸ்தலத்திலாவது ராமாநுஜாபாத்ரம் தலைகாட்ட ப்ரஸக்தியுண்டா? ஆக்ரமித்த ஐந்தாறு கோவில்களிலும், வெட்கம் மானமில்லாமல் அங்கங்கே புதிது புதிதாகக் கட்டிவருகிற தேசிகர் கோவில்களிலும் தவிர வேறிடங்களில் தலைகாட்ட மாட்டாத ராமாநுஜாபாத்ரத்தை தேசிகர் காலத்தில் தோன்றியதாக ஓய் நவநீதராமரே! நீரா எழுதுவது? உம்முடைய விவேகசக்தி எங்கேபோயொளித்தது? உம்முடைய உப்பிலியப்பன் கோயிலில் ராமாநுஜாபரத்ரம் எந்த வருஷத்தில் எந்த மாதத்தில் எந்த தேதியில் புகுரத் தொடங்கிற்றென்பது உமக்கு உண்மையாய்த் தெரியாதா? ஸர்வசக்தியுள்ள ஸ்வாமிக்கு முன்பாக ஸத்யமாகச் சொல்லுவீரா? உம்முடைய திருத்தகப்பனார் பொய் சொல்லாதவர், பொய் சொல்லமாட்டாதவர் பொய் சொல்லியறியாதவர். அவர் உள்ளது உள்ளபடியே சொல்லிக்கொண்டிருந்தது உமக்குத் தெரியாதா? நீருமா உப்பிலியப்பன்?

17. 'ஏன் தெரியாது? தெரியும்; நன்றாகத் தெரியும்; அதை நான் வெளியிட்டுப் பிழைக்க முடியுமா?' என்பீர். வாஸ்தவம்; வெளியிட முடியாதுதான்: வெளியிட்டுப் பிழைக்கமுடியாதுதான். இப்படிப்பட்ட விஷயங்களில் வாயைக் கையைத் திறவாமலிருந்துவிடுவதன்றோ உத்தமம். ராமாநுஜாபாத்ரம் தோன்றியதை மட்டும் எழுதினீரே, நமோ ராமாநுஜார்யாய தோன்றினதைப்பற்றி ஏனையா எழுதவில்லை? அப்புள்ளாருக்கு தேசிகர் சாதித்த தனியனில் ப்ரபூதம்

என்கிற அச்லீல சப்தம் வருவதால் அதைத் தள்ளி நமச் ஸ்ரீசைல நாதாய போலே வேறொரு அநுஷ்டுப்பு எழுதிவைக்கும்படி ஒரு அவ்யபதேச்யருக்குக் கட்டளையிட, அவர் அதை விண்ணப்பம் செய்தார் என்று ஏன் எழுதிவைக்கக் கூடாது நீர்? எல்லாவற்றுக்கும் ஒரு கர்த்தாவைக் காட்டுகிறமாதிரி அதற்கொரு கர்த்தாவைக்காட்ட இன்றுவரை முடியவில்லையே! ஏன் முடியவில்லை? சொக்கலிங்க மையங்கார் சொன்னது என்று ஏதோவொரு பெயரை எழுதி வைத்தால் அடிப்பாரார்? அதைப்பற்றிக் கேள்வி வரப்போகிறதா? என்றுதானே நினைத்துவிட்டீர்கள். உங்களுடைய குஸ்ருஷ்டிகளில் கேட்கவேண்டிய கேள்விகள் ஒன்று இரண்டா? ஒன்பதினாயிரம் கேள்விகளன்றோ புதைபாணம் போலே புறப்படுகின்றன. 'தேவகீ நந்தநா உன் ஜோலிகீ வந்தெனா?' என்றிருக்கவேண்டிய நீர் இந்த தலைவிதியில் வந்து என்கணும் மாட்டிக்கொண்டீர்? சாய்காலுள்ள விடத்தில் கோஷித்துக்கொண்டு கிடப்பதோடு நிற்கலாகாதா?

18. சங்கராசாரியர் முன்னிலையில் ராமாநுஜர் தனியனைச் சொல்லுவதென்றோ, ராமாநுஜர் முன்னிலையில் சங்கரர் தனியனைச் சொல்லுவதென்றோ எங்கேயாவது ஏற்பட்டிருக்கிறதா? ஏற்படக்கூடிய விஷயமா இது? தேசிகர் ஸகல ஆசாரியர்களோடும் ஒத்துவாழ்ந்த படியாலே மற்ற ஆசாரியர்களின் திருமுன்பே எவ்விதமான தனியன் கிரமம் நிர்விவாதமாய் நீண்டகாலமாய் நடைபெற்று வருகிறதோ அவ்விதமான கிரமமே தேசிகர் முன்னிலையிலும் நடந்துவாராநிற்க, இதில் வீணானவொரு அஸஹிஷ்ணுதை ஏற்பட்டு அப்பப்ப! என்னென்ன விபரீதங்களை யுண்டுபண்ணினீர்கள்? எத்தனை லக்ஷக்கணக்கான பணச்செலவு செய்தீர்கள்? லக்ஷக்கணக்குதானா? கோடிக்கணக்குமன்றோ ஆயிற்று. எத்தனை செய்தும் தேசிகர் தம் அவதார ஸ்தலத்தில் இந்த பாத்திரத்தை அணுகவொட்டாமல் தடை செய்தே வருவதைக் கட்கூடாகக் கண்டு வைத்தும் இந்த விச்வாமித்ர ஸ்ருஷ்டி போதும் போதும் போதுமென்று விட்டுத் தொலைக்க மனமில்லாமல் இன்னமும் பாழும் நப்பாசை தொடருகின்றதே!

19. தேசிகர் பகவத்விஷய காலக்ஷேபம் சொல்ல எப்போது ஆரம்பித்தார்? எத்தனை வருஷ காலம் ஸ்ரீமாந் வேங்கட தனியனைச் சொல்லி அந்த காலக்ஷேபம் நடந்துவந்தது. திடீரென்று ஒருநாள் அதைத் தள்ளி ராமாநுஜாபாத்ரத்தை யொரு சுதந்திரஜீயர் விண்ணப்

பித்தாரென்றும், அதைத் தேசிகரும் பேஷ் பேஷ் பலபேஷ் பலே பேஷ் என்று ஆமோதித்தாரென்றும், கவிதார்க்கிககேஸரீ என்கிற கர்ணுருந்துதமான கடோரசப்த ஸந்தர்ப்பம் பகவத்விஷய காலக்ஷேபத்திற்கு வேண்டாமென்று தேசிகரே கட்டளையிட்டாரென்றும் இப்படியெல்லா மெழுதிவைக்கக் கைவந்ததும், அவர்கள் தங்களை தேசிக பக்தர்களென்று கூசாமல் சொல்லிக்கொள்வதும், அன்னவர்களோடே சேர்ந்து நவநீதராமரே! நீரும் தாளம் போட்டு ஒத்து ஊதுவதும் ஐயோ! என்ன காலக்கொடுமை! ஸ்ரீசைலேசதயாபாத்ர மென்றால் ராமாநுஜதயாபாத்ர மென்னவேண்டியது; நமச் ஸ்ரீசைல நாதாய என்றால் நமோ ராமாநுஜார்யாய என்ன வேண்டியது. வாழி திருவாய்மொழிப்பிள்ளையென்றால் வாழியிராமாநுசப்பிள்ளானென்ன வேண்டியது, தேறும்படியுரைக்குஞ்சீர் என்றால், மாறும்படியுரைக் குஞ் சீரில்லாமே தேறும்படியுரைக்குஞ்சீரென்பது, செய்யதாமரைத் தாளிணை வாழியே யென்றால், வைக்கோல்புரியைப் போட்டுக் கொண்டு மெல்லுகிறுப்போலே வஞ்சப்பலசமயம் மாற்றவந்தோன் வாழியே யென்பது. அடியார்கள்வாழ அரங்கநகர்வாழ என்றால், நானிலமுந் தான்வாழ நான்மறைகள் தாம்வாழ, மாநகரில் மாறன் மறைவாழ என்பது. இன்னமொரு நூற்றாண்டிருமென்றால், இன்ன மொரு நூற்றாண்டிருமென்பது—இப்படியாக அநுஷ்டுப்புக்கு அநுஷ்டுப்பு, வெண்பாவுக்கு வெண்பா, ஆசிரியத்திற்கு ஆசிரியம், தொங்கலுக்குத் தொங்கல் இங்ஙனே வைரக்கமலத்திற்கு ரங்கூன் டைமண்டு போலே கற்பனை செய்திருக்கிறபடியைக் கண்டுகொள்ள நவநீதராமரே! உம்மாலுமா முடியவில்லை? "மாநகரில் மாறன் மறைவாழ" என்கிறீர்களே, அந்த மாநகர் எது? அது ஸாமாந்ய சப்தமா? விசேஷ சப்தமா? சொல்லுவீரா? "அரங்கநகர் வாழ" என்று ஏற்கெனவே அவதரித்து விட்டபடியால் அதையிட்டு வெண்பா இயற்றக் கூசி 'மாநகரில்' என்று அர்த்தமற்றதொரு சொல்லைப் புகுத்தினீர்கள். நம்மாழ்வார் "தென்திருப்பேரெயில் மாநகரே" என்று தென்திருப்பேரை யென்னும் திவ்யதேசத்தை மாநகராக வ்யபதேசித்தருளியுள்ளார். அந்த மாநகரில் மாறன் மறை வாழவேணுமென்று கோஷிக்கிறீர்கள்? "மாநிலத்தில் மாறன்மறை வாழ" என்று கோஷித்தால் உங்களைக் கேட்பாருண்டா? ஆக்ரஹம் தாங்கமுடியாமல் அஸம்பாவிதத்தை யெல்லாம் சேர்த்து எவனோ வொரு வழிப்போக்கன் பாடின பாட்டுக்களை நீருமா உகப்பது?

"மாநகரில்" என்றால் அது எந்த நகரமென்று உமக்கும் ஆராயத் தோன்றவில்லையென்றால் வேறு யார்கொல் ஆராயவல்லார். டில்லி, பாம்பே, கல்கட்டா, அலஹாபாட், ஹைடராபாட் என்னுமவை மஹாநகரங்களாதலால் அவற்றிலும் மாறன்மறை விளங்கவேணு மென்று மங்களாசாஸனம் செய்கிறீர் போலும். இப்படித்தானே ?

20. "திருமலைமால் திருமணியாய் சிறக்கவந்தோன் வாழியே" என்னுமிது ஒரு அஸம்பத்த ப்ரலாபம். திருமலைமாலின் திருமணி தேசிகராக வந்ததா ? தேசிகர் திருமலைமால் திருமணியாய் வந்தாரா ? என்று கேட்டால் 'என் தாயார் ஆசாரியன் திருவடி யடைந்தார்' என்ன வேண்டியிருக்க 'ஆசார்யர் என் தாயார் திருவடிகளை யடைந் தார்' என்னுமாபோலே இதென்ன அநந்வித ப்ரலாபமென்று விட்டுத் தொலைக்க உம்மாலும் முடியவில்லையா? "திருமலைமால் திருமணியே யெனவந்தோன் வாழியே" என்று எளிதாகத் திருத்திக் கொடுக்க உம்மாலுமா முடியவில்லை ? "ஸூநுமீதாயடிம" என்று ஒரு பெரிய பாஷ்யகாரர் எழுதி வைக்க, அதை அவருடைய சிஷ்யவர்க்கம் பரம்பரையாய்ப் பேணிக்கொண்டு வரவில்லையா ? என்பீர். வாஸ்த வம். அது ஒரு பாஷ்யகாரர் எழுதிவைத்தது என்பது திண்ணமாகத் தெரியும். இது அப்படியன்றே. ஒரு (முதலியையோ நாயுடுவை யோ) சிலரைப் பிடித்து 'இதேபோல எழுதிக்கொடப்பா' என்று கேட்டு எழுதுவித்துக் கொண்டதென்பதை நீருமா அறிந்திலீர். "வஞ்சப் பலசமயம் மாற்றவந்தோன்" என்கிறீர்கள். மோனையின்பம் ஸரி. வஞ்சப்பலசமயத்தை மாற்றுகையாவதென்ன ? மாற்றுகை யும் தொலைப்பதும் பரியாயமா ? 'மாய்க்கவந்தோன் வாழியே' என்று திருத்திக் கொடுக்கலாகாதா ? கோழியாலம் ஸ்வாமி ஸ்ரீபாஷ் யாதிகளில் தமக்கு அஸங்கதமாகத் தோன்றின பாடங்களைத் துணிந்து திருத்திவிட வில்லையா ? அப்படியே நீரும் திருத்தினாலென்ன ? "உத்ஸ்ருஜ்ய தேசிகவாகீசம் ஸாரநயத்ரயீ காமதோஹ்யம் நிர ஸ்யி விப்ரவாணா வ வ்யுஷ்ட்டீ" என்னலாமே நீரும்.

21. விஷ்ணு கோவில்களில் சடகோபம் என்று வைத்து எல் லார் தலையிலும் ஸாதிப்பதைப் பார்த்தவர்கள் அதேமாதிரி சிவன் கோவில்களிலும் வைத்து அதற்கு ஜடகோபுரம் என்று பேரும் வைத்து "ஜடகோபுரம் தரிச்சுக்குங்கோ" என்று தலையில் மொட்டு

வதை நீரும் பார்த்திருக்கிறீரல்லவா? இந்த இமிடேஷன் எத்தனை நாளாக? இதுபோன்ற இமிடேஷன்கள் எத்தனை? என்பதையும் அறிவீரல்லவா? அந்த ஜடகோபுரத்திற்குச் சில பாமர ஜனங்கள் தலைகாட்டுமேயொழிய விவேகிகள் தலைநீட்டுவதில்லை யென்பதையும் அறிவீரல்லவா? அப்படியே உங்களுடைய ஈட்டிப் போட்டிச் செயல்களையும் பரமைகாந்திகளாய் மஹாவிவேகிகளாயுள்ளவர்கள் ஆதரிப்பதில்லை யென்பதையும் அறிவீரே.

22. "த்ரிம்சத்வாரம் ச்ராவித சாரீரக பாஷ்ய:" என்று தாமே ஸாதித்தபடி முப்பது பர்யாயம் ஸ்ரீபாஷ்ய ப்ரவசநம் செய்து போந்தவர் ஸ்வாமி தேசிகர். அதனிடையே திருவாய்மொழி ப்ரவசனமும் செய்துகொண்டிருந்தவரேயொழிய கேவலம் ஸ்ரீபாஷ்யத்தை மட்டும் ப்ரவசனம் செய்துகொண்டிருந்தவரல்லர். இப்படிப்பட்ட ப்ரவசனங்களில் ச்ரோதாக்களான சிஷ்யர்கள் ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய தனியனை யநுஸந்தித்துக் கொண்டிருந்தவர்களேயல்லது வேறொன்றை நெஞ்சாலும் நினைத்தவர்களல்லர். அப்படியிருக்க திடீரென்று ஒருநாள் ராமாநுஜாபாத்ரம் வந்து முளைத்ததென்பது விவேகிகளின் வாக்கில் வரக்கூடியதா? 'கவிதார்க்கிககேஸரீ' என்கிற விசேஷணமுள்ள தனியன் பகவத்விஷய காலக்ஷேபத்திற்குத் தகாதென்று தள்ளப்பட்டதாகப் பரகாலமடம் எழுதுவதும், இதை வடகலையுலகம் ஆமோதிப்பதும் என்ன கலிக்கேடு! கவிதார்க்கிககேஸரீ யென்று சொல்லி பகவத்விஷயம் ஸேவித்தவர்கள் எத்தனைபேர்கள்? எத்தனை வருஷகாலம் அப்படி ஸேவித்தார்கள்? அவர்களெல்லாரும் பிறகு பிராயச்சித்தம் செய்துகொண்டார்களா? "ஸ்வஸூக்தீர்த்ய காஞ்சநா வஹிஷ்யந்த வாம்ஸ்யாதி | பாவம் ஶௌரிஸ்யாநாம மம்மயேவ வக்ஷ்யாமஹே ||" என்றுப்போலே "கவிதார்க்கிக ஸிம்ஹஸ்ய ஸ்தநாத் ஸ்தந்யம் க்ஷீரதாம் | ஜிஹ்வாம் பொணைக்கலப் வாத்து க்ஷீரம் நாஸ்ய ஶோதயாமஹே ||" என்று நிஷ்க்ருதி செய்துகொண்டதாகச் சிலர் எழுதி வைத்திருப்பதை நீரும் நம்புகிறீரா?

23. பெரியபெருமாள் தொடங்கி ஸ்ரீபாஷ்யகாரர் வரையிலும் குருபரம்பரைத் தனியன்களை ஒன்றுதப்பாமல் மாற்றியிருக்கிறீர்களா இல்லையா? ஏனில்லை? மாற்றியேயிருக்கிறோமென்பீர். யோகித்யமச்யுத தனியன் உங்களுக்குக் கிடையாது; மாதாபிதா தனியன்

கிடைபவே கிடையாது. ஸமாச்ரயண பரம்பரையோ க்ரந்த பரம் பரையோ அந்த பரம்பரையோ எந்த பரம்பரையிலும் இந்தத் தனி யன்கள் உங்களுக்குக் கிடையாதே? கிடையாது. அப்படியிருக்க ராமாநுஜபாத்ரத்தோடு மட்டும் இந்தத் தனியன்களை எதற்காகச் சேர்த்தீர்கள்? "திசிதிசி விலோலநயநம்" என்று நிற்கவேண்டுமே யொழிய வாயைத் திறக்கமுடியுமா? "ஸ்ரீமந் ஸ்ரீரங்க ச்ரியமநுபத்ர வாமநுதிநம் ஸம்வர்த்தய" என்று கத்துகிறீர்களே, இதற்கு ஏதா வது அர்த்தமுண்டா? ஸ்ரீரங்க ஸ்ரீக்கு யாவச்சக்யம் உபத்ரவம் செய்யவேணுமென்கிற எண்ணமும் ப்ரவ்ருத்திகளும் அல்லும் பக லும் இற்றைக்கும் இடையறுதிருக்க 'ஸ்ரீரங்கஸ்ரீ அநுபத்ரவமாக அநுதினமும் அபிவிருத்தியடைந்து வரவேணும்' என்கிற ஆசா ஸனம் ஒரு விவேகி செய்யக்கூடியதா? ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞை யில் நீங்கள் யலகாதவழி விலகியிருக்க "ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததா மபிவர்த்ததாம்" என்று கத்துவது என்னே! இந்த சுலோகம் எப்போது அநுஸந்திக்கப்படுகிறது? எதற்காக அநுஸந் திக்கப்படுகிறது? அந்த ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா ஸ்வரூபம் எத்தகைத்து? இதை ஸ்ரீபாஷ்யாதி காலக்ஷேப ஸமயங்களில் சொல் லாமல் திவ்யதேசங்களில் திவ்யப்ரபந்த கோஷ்டிகளில் சொல்லும் படியான கட்டளை ஏற்பட்டது எதனாலே? என்று இவ்வளவு கூட விமர்சிக்க உம்மாலு மாகவில்லையா? அவிவேகிகளோடு விவேகிக ளோடு வாசியறும்படி இப்படியுமா ஒரு கலிகோலாஹலக்ரீடை!

24. இவ்வுலகில் எத்தனையாசாரியர்கள் அவதரித்திருக்கவில்லை. அவர்களுக்கெல்லாம் தனியன்கள் இல்லையா? வாழிதிருநாமமில்லையா? அவற்றைச் சொல்லுவதற்கு ஒரு தடையுண்டா? ஒரு தண்டனை யுண்டா? அவற்றைப்பற்றி நீதிமன்றங்களில் ஒரு விவாதமுண்டா? இந்த ராமாநுஜாபாத்ரத்துக்குத்தானு நாடறிய நகரமறிய த்வீபமறிய த்விபாந்தரமறிய ஸகல பரிபவங்களும் நேரவேணும்! உண்மையில் இந்த பரிபவத்தை விளைப்பவர் மானிடவரல்லர்; ஸ்ரீமாந் வேங்கட நாதார்ய தனியனே தன்னை யவமதித்தது காரணமாக விளைத்தது, விளைக்கின்றது. "தேசிகர் தனியனை தேசிகர் முன்னிலையில் சொல்லு கிறோம்" என்று ஒரு பெருங்கூட்டத்தார் சொன்னால் இதைத் தடை செய்ய ஒரு மனிதனுக்குத் தோன்றுமா? மஹாவிவேகி களான த்விபாந்தரஸ்த ஜட்ஜுகளுக்குமன்றோ இது இமிடேஷன்

தனியனென்று தெரிந்துவிட்டது. ஹிந்துக்களில் எத்தனை ஜாதியா ருண்டோ, ப்ராஹ்மணர் அப்ராஹ்மணர், வைஷ்ணவர் ஸ்மார்த்தர், மாத்வர், மலையாளர், தெலுங்கர், கன்னடர் இத்யாதி பல பல வகுப்பினர், மஹம்மதியர், க்ரிச்சியன்கள், ஹூணர் இத்யாதி வகுப்பினர்— ஆக பூலோகத்திலுள்ள ஸகல ஜாதியர்களிடத்திலும் ராமாநுஜா பாத்ர வழக்கு பல திவ்யதேசங்களிலிருந்து சென்றிருக்கிறது இது அஸதுக்தியன்று. ஸிவில் விவகாரங்களாகவும் கிரிமினல் விவகாரங் களாகவும் தாற்காலிக டிக்ஷன்களாகவும், லொட்டு லொஸூகு என்னும்படியான மற்றும் பல சில்லரை விவாதங்களாகவும் கோர்ட்டுகளில் ஏறினவையெல்லாம் "பாதுகாஸஹஸ்ரபஹூமா னம்" என்று ஒரு ஸ்வாமி யெழுதியிருக்கிறுரே அந்த பஹூமானத் தையன்ருே பெறுவித்திருக்கின்றன. தென்கலையார் குடிவாழகில்லா மல் வெளியேறிப்போன சிலவிடங்களில் கொடிநாட்டி விட்டோ மென்று குதிக்கிறீர்கள். அபூர்வ ஸமாசாரமா இது ?

— இனி ஸாரமான பல பேச்சுக்கள் —

1. ஸ்வாமிந் நவநீதராமரே! உம்மை ஒரு நூறு கேள்விகள் கேட்கவேணுமென்று ஆசைப்பட்டு இது தொடங்கினேன். எத்தனை கேட்டாலென்ன ? ஒருவிதமான பதிலும் பேசாமல் இருக்கப் போகிறீரே யொழிய வாயைக் கையைத் திறக்கப் போகிறீ ரோ ? திறக்கத்தான் வழியுண்டோ ? உண்மையில் மஹாவிவேகி யான உமக்கு ஹிதபுக்தியுடன் பல பல தெரிவிப்பதைக் கேளும். விருக்களை முடித்துவிட்டேன், சதுர்விம்சதி தத்வங்கள் என்கிற கணக்கிலே **சதுர்விம்சதி ப்ரச்ந ரத்நமாலிகை** உமக்கு ஸமர்ப்பித்த தாகக் கொள்க. இனி ஸ்வல்பம் எழுதுமவை உமக்கும் உம்மைப் போன்ற விவேகிகளுக்கும் ஹிதஸமுத்போதனமென்று கொள்ளீர். தேசிகருக்கும் உங்களுக்கும் அநுஸ்யூதமான ஸம்பந்தம் கிடையா தென்பதும் ஏதோ சண்டைக்காக வலுவில் இழுத்துப் போட்டுக் கொண்டதே யென்பதும் பார்லிமெண்டு தீர்ப்புதான், ஆனால், அதனால் உங்களுக்கு ஒரு ஹாநியுமில்லை. தேசிகரோ ஒப்புயர்வற்ற மஹாசார்யர். ஈடுமெடுப்புமில்லாத குருஸார்வபௌமர். அப்படிப் பட்ட ஆசார்ய ச்ரேஷ்டரை நீங்கள் தலைவராகக் கொண்டதற்குத் தகுதியாக பரமஸாத்விகபாவத்தை வஹிக்கவேண்டியது கடமை யாகும். அந்த மஹாசார்யருக்கு ஸத்யமாக எந்தெந்த பெருமை க

ளுளவோ அந்தந்த பெருமைகளை யநுபவித்துக்கொண்டு பரம ஸாத்விகஸரணியில் போதைப் போக்குவது எவ்வளவு அழகு !

2. ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய தனியனை தினப்படி ஆயிரம் முறை நியதியோடு ஜபித்தால் ஸகலவிதாபீஷ்டஸித்தியுமுண்டாகும். ஆனல் ராமாநுஜாபாத்ரத்திற்கு வெற்றியுண்டாக வேணுமென்கிற ஒரு அபீஷ்டம் மட்டும் தலைகீழாக நின்று தவம் புரிந்தாலும் ஸித்தியாது. பூர்வாசாரியர்களென்று எத்தனையாசாரியர்கள் உள்ளார்களோ அத்தனையாசாரியர்களும் தென்னாசாரியர்களேயொழிய ஒருவர்கூட வேற்றுமைப்பட்டவரல்லர் என்பதைத் திடமாக நெஞ்சில் கொள்ளும்: இக்கொள்கைதான் உமக்கு க்ஷேமங்கரம்.

3. இருநூறு வருடங்களுக்குப் பிற்பட்ட செய்திகளை வெகு தூரத்தில் விட்டுவிடும். தேசிகருடைய காலம் 600 ஆண்டுகளாகிறதல்லவா ? இடையில் நானூறாண்டுகளை யெடுத்துக்கொள்ளும். அந்த காலகலையில் உங்களுடைய ஸம்பிரதாயஸ்தராக ஒருவர் ஆழ்வார்களைப் பற்றியோ ஆளவந்தார் எம்பெருமானர் முதலான ஆசார்யர்களைப்பற்றியோ விசிஷ்ய தேசிகரைப் பற்றியோ அணுமாத்ரமாவது ப்ரஸ்தாவம் செய்திருப்ப துண்டோவென்று காஞ்சீபுரம் ஸ்வாமி எத்தனை நூல்களில் கேட்டிருக்கிறர். முற்காலம் பிற்காலம் இடைக்காலம் என்று காலத்தை மூன்ருகப் பிரித்து, (1) முற்காலத்தில் தேசிகருடைய ஸ்ரீஸூக்திகளைப் பலவிடங்களில் உதாஹரித்தவர்கள் வாதிகேஸரி ஜீயரும் மணவாளமாமுனிகளும் ; (2) இடைக்காலத்தில் காஞ்சீபுரம் அழகியமணவாளஜீயரும் சோளஸிம்ஹபுரம் தொட்டயாசார்ய ந்ருஸிம்ஹராஜ ப்ரப்ருதிகளும்; (3) பிற்காலத்தில் மைஸூர் அனந்தாழ்வான் ப்ரப்ருதிகள். என்று கண்ணுடிபோல் காட்டியிருக்கிரு ரல்லவா ? இவ்விதமாக நீர் காட்ட விரும்பினுல் பிற்காலத்தவர்கள் தவிர வேருருவரைக் காட்டமுடியுமா ? முடியுமானுல் தேவஸ்தான பத்ரிகையின் மூலமாகவே வெளியிட்டு உலகமெல்லாம் உண்மையுணரும்படி செய்வீராக. இதுதான் முக்கியமான பணி. மிக மிக முக்கியமான பணி.

4. ஒன்று முக்கியமாகக் கவனிக்கக் கடவீர், திருக்கச்சிநம்பிகளின் மரபைச் சேர்ந்தவர்களாக அனேக ப்ராந்தங்களில் சிலர் வாழ்கின்றுர்கள். அவர்களில் ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தைக்

கொண்டாடுமவர்கள் மிகச் சிலரே. விபூதியையும் ருத்ராக்ஷத்தை யும் தரிப்பவர்களே அதிகமாகக் காணப்படுகிறார்கள். அவர்கள் திருக்கச்சிநம்பி பக்கலில் மிகுந்த பக்தியோடுதானிருக்கிறார்கள். பல விடங்களில் நம்பி ஸன்னிதிகளுக்கு அவர்கள் டிரஸ்டிகளாயுமிருந்து வருகிறார்கள், அன்னவர்கள் நம்பிக்குத் திருமண்காப்பை மாற்ற வேணுமென்றாவது விபூதி யணிவிக்கவேணுமென்றாவது ஸ்ரீவைஷ் ணவ ஸம்பிரதாயப்படி நடந்துவருகிற வழிபாடுகளை மாற்றவேணு மென்றாவது நெஞ்சாலும் நினைப்பதில்லை. 'நாம் எப்படியிருந்தா லும், ராமாநுஜமுநேர் மாந்யரான அவ்வாசிரியர் (நம்பிகள்) விபவத் தில் எப்படியிருந்தாரோ அப்படியே அர்ச்சையிலு மிருக்கட்டும்' என்று அத்யவஸாயங்கொண்டு அவருடைய உண்மை நிலைக்கு எள்ளளவும் மாறுபாடில்லாமல் நடந்துகொள்ளுகிறார்களென்பதை நீர் அறியாதவரல்லீர். இதேபோல, தேசிகர் விஷயத்திலும் நீங்கள் இருக்கவேண்டிய நிலையை நான் விவரிக்க வேணுமோ ?

5. தேசிகர் தம் அவதாரஸ்தலத்தில் எவ்விதமான வழிபாடு கொண்டாட நிற்கிறாரென்பதை நான் அடிக்கடி யெடுத்துக்காட்ட வேணுமோ? வடகலை மதத்திலும் தாதாசார் குடும்பத்திலும் நிகரற்ற பெரியவராக விளங்கின திருப்புட்குழி ஸ்வாமி யென்பவர் நீதிமன் றத்தில் ஏறி "விளக்கொளி தேசிகர் தென்கலைத் திருமண்காப்பு உள்ளவரே, தென்கலையாருடைய வழிபாடுகள்தான் அங்கு நடந்து வருவது, அங்கு வடகலைஸம்பந்தம் யாதொன்றும் கிடையாது" என்று உள்ளபடி ஸாக்ஷியம் கூறினது ரிகார்டுகளில் ஏறி விளங்கு வதை காஞ்சிபுரம் ஸ்வாமி பல நூல்களில் எடுத்துக்காட்டியிருக் கிறார். அது பொய்யாக எழுதப்பட்டதென்று இதுகாறும் உங்க ளில் ஒருவர்கூட எழுதவில்லை. இதனால் தேசிகர் அவதாரஸ்தலத்தில் தம்முடைய உண்மை ஸ்வரூபத்தையுடையவர் என்பது மறுக்க முடியாமலிருக்கின்றது. இதை நன்குணரும் நீங்கள் திருக்கச்சிநம்பி வம்சஸ்தராகக் கீழே தெரிவிக்கப்பட்டவர்களின் நடத்தையைப் பின்பற்ற வேண்டாமா? தேசிகர் திருவுள்ளம் கன்றும்படியாகச் செய்து போருவதா தேசிகபக்திக்கு இலக்கணம். "உள்ளதைச் சொன்னால் நொள்ளைக் கண்ணிக்கு நோப்பாளம்" என்கிற பழமொழி யின்படி நீங்கள் வீணாக நம்மேல் வருந்துவது நியாயமல்ல நான் எழுதுவது தவறாக இருந்தால் நீரோ உம்மைச் சேர்ந்தவர்களோ

பிராமாணிகர்கள் உகக்கும்படி உண்மையை விளக்கி உலகத்தைத் தெளிவிக்க வேண்டாமா? ?ல

6. "யார் என்ன எழுதினாலும் நாம் தேசிகரை விட்டுவிட முடியுமா? அது ஒருநாளுமில்லை: யார் எதை யெழுதினால் நமக் கென்ன?" என்று உம்மைப் போன்றவர்கள் நினைக்கவும் சொல்ல வுங் கூடும். நீங்கள் தேசிகரை விட்டுவிடவேணுமென்று யாரும் சொல்லவில்லை, அப்படி நெஞ்சாலும் நினைப்பாரில்லை. அவரை எதற்காக விடவேணும்? எந்த அம்சத்தில் அவர்க்குக் குறை? நாம் தெரிவிக்கிற விஷயம் இன்னதென்பதை நன்றாக கவனியும். அவரை நீங்கள் குலகுருவாகக் கொள்ளவேணுமேயானால் அவரு டைய நூல்களில் நிஷ்கர்ஷிக்கப்பட்ட அர்த்தங்களை அப்படியப்படி யே கொண்டாட வேண்டாமா? "உலகோ உறங்குமே" என்று திருவாய்மொழியில் நம்மாழ்வார் ஸாதிக்கிறபடி உலகமெல்லாம் உறங்குவதாகவன்றோ நீங்கள் நினைத்திருக்கிறீர்கள். சில பிறமதஸ் தர்கள் நாராயணா நாராயணா என்று சொல்லிக்கொண்டே நாரா யணனை நிந்திப்பது போலவும், சிலர் ராமசாமி யென்று பெயர் வைத் துக்கொண்டே ஸ்ரீராமபிரானை நிந்திப்பது போலவும், நீங்களும் வாய்க்கு வாய் தேசிகன் தேசிகன் என்று சொல்லிக்கொண்டே தேசிக ஸ்ரீஸூக்திகளுக்கு நேர்விருத்தமாகவேயன்றோ ஒவ்வொரு விஷயமும் சொல்லிவருகிறீர்கள். வரிசையாகக் கேளும்.

7. மாக கவி "கேஸரீ நிஷ்டுரக்ஷிப்த ம்ருகயூதோ ம்ருகாதிப:" என்று சொன்னாப்போலே, தேசிகருடைய நிஷ்கர்ஷங்கள் தென்னா சார்ய ஸம்பிரதாயத்திற்கு இணங்கியிருக்கின்றனவென்று கொண்டு தென்னாசாரியர்களிடத்துள்ள மாச்சரியத்தினால் தேசிகர் காட்டியரு ளின அர்த்தங்களை யெல்லாம் க்ஷேபித்துவிட்டு தேசிக பக்தர்க ளென்றும் தேசிக ஸம்பிரதாயமென்றும் தேசிக தரிசனமென்றும் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். காஞ்சிபுரம் ஸ்வாமி வெளியிட் டிருக்கிற **தேசிக ஹ்ருதய** மென்கிற நூல் ஸ்ரீராமாநுஜன் 141–142ல் 30 பக்கங்கள் விளங்குகின்றனவே. அதில் தென்னாசார்ய ஸம்பிரதா யார்த்தங்களை தேசிகர்போல் நிலைநாட்டினவர் வேறு எந்த ஆசாரி யருமிலர் என்று அபேத்யமாக நிரூபிக்கப்பட்டிருக்க வில்லையா? அந்த நிரூபணங்கள் தவறு என்று விளக்கிக் காட்ட வேண்டியது உங்களுக்குக் கடமையல்லவா? அதிலிருந்து ஸாரமாக நானெடுத் துக் காட்டுகிறேன். இதற்காவது பதில் சொல்லும்

8. மிக முக்கியமாக இதைக் கேளும். வடகலை மதத்தில் பிரபத்தி உபாயம் என்கிற ஒருவாதமும், எம்பெருமானைப் போலவே பிராட்டியும் மோக்ஷமளிக்க உரிமையுடையவள் என்கிற வொரு வாதமும் தலைமை பெற்றிருப்பவை. அல்லவா? அல்லவென்று சொல்லிவிட்டீராகில் இதைப்பற்றின சர்ச்சையை அறவே விட்டு விடுகிறேன். அப்படிச் சொல்ல முடியாதன்றோ உம்மால். பிரபத்தி உபாயந்தானென்றும், பிராட்டியும் பகவந் நிர்விசேஷமாக மோக்ஷ ப்ரதைதானென்றும் முஷ்டி பிடிக்கிறீர்கள். உங்களுடைய மதத்திற்கு இதை ப்ரதாநப்ரதிதந்த்ரார்த்தமாகவும் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் இவ்விரண்டையும் தேசிகர் வலிதாகக் கண்டித்திருக்கிறுரென்பதை அறியாதவர்களல்லீர். அப்படிக் கண்டித்ததே கிடையாதென்கிறீராகில் குன்றிலிட்ட விளக்குப்போலே அவர் எழுதி வைத்திருப்பவைகளை மறைக்க முடியாதே. மலைமலையாகக் காட்ட வேண்டியிருந்தும் ஸ்வல்பம் காட்டுகிறேன். ந்யாய ஸித்தாஞ்ஜநத்தில் ஜீவபரிச்சேதத்தில் "இயம் கேவல லக்ஷ்மீசோபாயத்வ ப்ரத்யயாத்மிகா । [illegible]" என்று காரிகையிட்டு வைத்திருக்கிறுர். இதில் ப்ரபத்தியின் உபாயத்வம் மட்டும் கண்டிக்கப்படவில்லை, பிராட்டியின் உபாயத்வமும் கண்டிக்கப்பட்டது. அதுதான் முதன்மையாகக் கண்டிக்கப்பட்டது. எங்ஙனேயென்னில், ப்ரபத்தியின் வேஷத்தைக் காட்டுமதான பூர்வார்த்தத்தில் "லக்ஷ்மீசோபாயத்வ ப்ரத்யயாத்மிகா" என்னுதே "கேவல லக்ஷ்மீசோபாயத்வ ப்ரத்யயாத்மிகா" என்கையாலே பிராட்டியின் உபாயத்வம் ப்ரஸங்கத்திலுமில்லையென்று தெளிவாயிற்று. ப்ரபத்தியென்கிற வஸ்து தேறும்போதே அது, தன்னை உபாயமென்ன ஸஹியாதே தேறுமென்பது ப்ரமாண ஸித்தம். இதை சாஸ்த்ரஜ்ஞர்கள் [illegible] மென்பர்கள். தார்க்கிககேஸரியான ஸ்வாமி அதை உயிராகப் பிடித்தன்றோ "கேவல லக்ஷ்மீசோபாயத்வ ப்ரத்ய யாத்மிகா இயம்" என்றுர். இங்கு கேவல பதத்தினுல் எது தவிர்க்கப்படுகிறதென்று கேட்கிறேன்; சோதிவாய் திறந்து பணிக்கவேணும். "ஸ்வஹேதுத்வதியம் ருந்தே" என்று கல்வெட்டுச் செய்தானபிறகும் ப்ரபத்தி உபாயம், ப்ரபத்தி உபாயம் என்று வாய்வெருவிக் கொண்டிருந்தால் இதற்கு ஏதேனும் அர்த்தமுண்டோ? அனர்த்தமொழிய வேறில்லை.

4

9. இப்படி தேசிக ஸ்ரீஸூக்திக்கு விருத்தமாக நீங்கள் சொல்லுவதோடு நில்லாமல் "தென்கலையார்கள் ப்ரபத்தி அநுபாயமென்று சொல்லி ப்ரபத்தி மார்க்கத்தை க்ஷேபம் பண்ணிவிட்டார்கள்" என்றும் அகாண்டே சொல்லி வருகிறீர்கள். ஆளவந்தாருடைய ஸ்தோத்ர ஸங்க்ரஹத்தில் "நிஜகர்மாதி" என்னும் சுலோகத்தில் "உபாயதாம் பரித்யஜ்ய ந்யஸ்யேத் தேவே து தாமிதி" என்றவிடத்திற்கு ரக்ஷையிலே தேசிகர் அருளிச்செய்திருப்பதாவது— "ஸ்வயம் ஸ்வாத்யபூதஸ்ய க்ஷணிகஸ்ய காயவாங்மநஸவ்யாபாரஸ்ய ந ஸாக்ஷாதுபாயத்வம் நாஸ்ய ஸ்வவ்யாபாரே மோக்ஷோபாயதாவாப்திரபி ஸ்யாதிதி பாவ:; அத ஏவ தைவீமாயாதிகோ மமவாநேவஹி ஸ்வபுத்ர்யுபாய:." என்று. இங்கு "அஸ்ய ஸ்வவ்யாபாரோ ந மோக்ஷோபாய:" என்று லகுவாக எழுதிவிடலாமாயிருக்க, அங்ஙனமெழுதாதே "ஸ்வவ்யாபாரே மோக்ஷோபாயதாபுத்திரபி ந ஸ்யாத்" என்றுரைத்ததிலுள்ள அதிசயத்தை அறிவீரா நவநீதரே!? ஸ்வயம் போக்யமான ஸ்வவ்யாபாரத்தை உபாயமாக நெஞ்சால் நினைப்பதும் தவறென்று கைவிளக்கேற்றிக் காட்டியிருக்கவில்லையா? ரஹஸ்யத்ரய ஸாரத்திலே "உபாய: ஸ்வரக்ஷணே ஸ்வவ்யாபாரவிஷயீகாரோ மமவாந்" என்று தொடங்கியும் "நிர்மம் கர்மாபி ஸ்வபரவிஷயநிர்வாணநிவர்தநம்:" என்று தலைக்கட்டியும் காட்டின சாஸ்த்ரார்த்தம் எவ்வளவு சீரியது! எவ்வளவு நுட்பமானது! "தத்ரைகத்ர ஸமிதாரப்யமேவ விஷயம் ... க்ரியா கர்த்ருகோலாஹல:" என்று தேசிகரே பணித்த கணக்கிலே இந்த ஒரு ஸ்ரீஸூக்தியின்கீழ் உபாயத்வபரமான வாதங்களத்தனையும் தலைமடிந்தொழியத் தட்டுண்டோ?

10. இனி பிராட்டியின் உபாயத்வத்தில் சென்ருலோ, வாசாமகோசரமான வெட்கக்கேடு. இதை நவநீதராமரை நோக்கிச் சொல்லுவதில் பயனில்லை. பெரிய சாஸ்த்ரவித்துக்கள் ஆராயவேண்டிய விஷயமிது. ரஹஸ்ய ரத்நாவளி யென்னும் சிறு ரஹஸ்யத்திலே ஸாரநிஷ்கர்ஷம் பண்ணுகிற தேசிகர்

"ஸ்ரீமானான நாராயணனொருவனுமே
ஸர்வ ஜீவர்களுக்கும் தஞ்சம்"—

என்றார். இவ்வளவோடு நின்றிருந்தால் அவரவர்கள் கொஞ்சம் போராடிக்கொண்டு போது போக்கலாம். அதற்கு இடமறும்படி உடனே

> "ஸர்வ ஸ்வாமிநியாய் ஸர்வேச்வரனுக்கு சேஷமாய் ஸஹ தர்மசாரிணியான பெரியபிராட்டியார் இத்தலையில் வாத்ஸல்யாதிசயத்தாலும் அத்தலையில் வால்லப்யாதிசயத்தாலும் புருஷகாரமாய்க் கொண்டு இஜ்ஜீவர்களுக்குத் தஞ்சமாகிறாள்"

என்று ஸகல பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளை யடியொற்றி அருளிச் செய்து, இதை ரஹஸ்ய ரத்நாவளீ ஹ்ருதய மென்கிற அடுத்த ரஹஸ்யத்திலே விளக்கமாக விவரித்தருளினார். உண்மையில் விவரணாபேக்ஷையே யில்லாததன்றோ விது. தேசிகர் இப்படி நிஸ்ஸந்தேஹமாக வருளிச்செய்த இடங்கள் ஒன்றிரண்டல்ல. சதுச்ச்லோகியில் மூன்றாவது சுலோகத்தின் பாஷ்யத்திலே "«மோக்ஷப்ரதே ஸமவதி ஸாம்ஸாரிணாம் புருஷகாரதயா ப்ரவேசோ ஸ்திதி: ஸம்மதம்»" என்றருளிச்செய்த தொன்று போதுமே. "எம்பெருமான்தான் மோக்ஷமளிப்பவன்; அதனைப் பெறுவிப்பவளாக மட்டும் பிராட்டி நிற்கின்றாள் என்பது இந்த ஸம்ஸ்க்ருத ஸ்ரீஸூக்தியின் பொருள். இப்படி கண்ணாடி போன்ற ஸ்ரீஸூக்திகளிருக்கவும் இதில் தடுமாற்றம் ஆச்சரியமன்றோ.

11. ரஹஸ்யத்ரய ஸாரத்தில் த்வயத்தின் பூர்வகண்டத்தில் (ஸ்ரீமத்) என்றவிடத்தில் பிராட்டிக்கு உபலக்ஷணத்வமா? விசேஷணத்வமா? என்றொரு சர்ச்சையை வளர்த்திக்கொண்டு உபலக்ஷணத்வமென்று சிலர் சொல்லுவதாக வைத்து அதைக் கண்டித்து விசேஷணத்வமே யுக்தமென்று ஸ்தாபிக்கப்படுகிறது. அங்கு—"இப்படி மத்யஸ்த த்ருஷ்டியாலே ப்ராமாணிகார்த்தங்கள் தோற்றச் செய்தே பற்றினது விடாதொழியில் '«த்ருவம் ஸ்ரீரேவ ஸ்ரீதா ஸ்ரீமா விசாரத: | வ்யஜாநத்யப்ஜஸ்ய ஸஹோதர: ஸ்ம்ருதி ஸம்ஸ்ருதி ||»' '«கந்யா ஸுதேவ ஜீநாம் ப்ரதிஹாஸ்திதாநாம் | ஸ்தலஸ்ய வ்யாஷ்டிதாநாம் விஹாரஸம்ப்ரயோஜிநாம் ||»' என்கிற ஏஷையாம்" இத்யாதி ஸம்பாவனைகளோடே தலைக்கட்டியிருக்கிறது. இந்த ஸம்பாவனைகள் உண்மையில் யாருக்குச்

சேருகின்றன வென்பதை விவேகிகள் விமர்ஶிக்கவேணும். இங்குப் பிராட்டிக்கு விஶேஷணத்வ மில்லையென்று ஒரு பூர்வாசார்யரும் உரைத்ததில்லை. முமுக்ஷுப்படியில் த்வயப்ரகரணத்தில் "இப்போ திவனைச் சொல்லுகிறது புருஷகாரமாக" என்ற சூர்ணையின் வியாக்கியானத்திலே மணவாளமாமுனிகள்—"(புருஷகாரமாக) என்கையாலே உபாயவஸ்து விஶேஷணமாயிருக்கிற ஆகாரத்தையிட்டு இவளுக்கும் உபாயத்வத்தில் அந்வயம் சொல்லும் பக்ஷம் நிரஸ்தம்" என்றருளிச்செய்திருக்குமிடத்து பிராட்டிக்கு விஶேஷணத்வத்தைக் கண்டோக்தியாகவே அருளிச்செய்திருப்பது காணலாம்.

12. இங்கு உபலக்ஷணத்வம் கொண்டாலும் விசேஷணத்வம் கொண்டாலும் வாசிசிறிதுமில்லையென்பதை ஶாஸ்த்ரமர்மஜ்ஞர்கள் உணருவார்கள். இதைக் காஞ்சீபுரம் ஸ்வாமி தம்முடைய பல நூல்களில் விசதீகரித்திருக்கிறார். ரஹஸ்யத்ரய ஸாரத்திற்கு ஶாஸ்த்ரஜ்ஞர்கள் யாரும் வியாக்கியான மெழுதவில்லை. நவீனகாலத்தில் சிறந்த ஶாஸ்த்ரஜ்ஞரான ஸ்ரீமத் பரமஹம்ஸ. இஞ்சிமேட்டழகிய சிங்கர் எழுதி வெளியிட்டுள்ள வியாக்கியானத்தில் உண்மை வெளிவந்துள்ளது. அந்த இஞ்சிமேட்டு ஸ்வாமி காஞ்சிபுரம் ஸ்வாமியின் க்ரந்தங்களைப் பூர்வாச்ரமத்திலும் உத்தராச்ரமத்திலும் பூர்த்தியாகக் கடாக்ஷித்தவராகையாலே நல்ல தெளிவுடன் எழுதியிருப்பதைக் கேளீர். அந்த ஸ்வாமியின் பதிப்பில் இரண்டாவது ஸம்புடத்தில் (பக்கம் 29ல்) விஶேஷணத்வ உபலக்ஷணத்வங்கள் ஜந்மாத்யதிகரண ஸ்ரீபாஷ்யத்தில் விவரிக்கப்பட்டிருப்பதாக எடுத்துக் காட்டிவிட்டு அதற்குமேல் எழுதுகிறார் வித்வானான இஞ்சிமேட்டழகியசிங்கர்—

> "இந்த உபலக்ஷணத்வத்தை ப்ரக்ருதத்தில் பிராட்டி விஷயத்திலே ஏகதேசிகளும் சொல்லுகிறார்களில்லை, சொல்லவும் முடியாது"

என்று. காஞ்சிபுரம் ஸ்வாமியினுடைய நிருபணங்கள் அசைக்க முடியாதவை யாதலால் இப்படி யெழுதித் தீரவேண்டியதாயிற்று அவர்க்கு. ஆனாலும் தாம் வியாக்கியானம் செய்ய இழிந்தவராகையாலே மூலத்தைத் தாமே கண்டித்துவிட்டால் நன்றாயிராதே. ஒருவாறு பொருந்த விடவேணுமென்று மிகவும் சிரமப்படுகிறார் பாவம்! உபலக்ஷணத்வ விசேஷணத்வங்களை இப்படிச் சொல்லலாமென்று ஒருவழியில் நுழைகிறார். எந்த வழியில் நுழைந்தாலும்

“உய்யும் வகையில்லை தொண்டர்” என்று நம்மாழ்வார் அருளிச் செய்தபடியல்லது வேறுண்டோ? நாம் கீழே உதாஹரித்த மணவாளமாமுனிகளின் ஸ்ரீஸூக்தி “ஸ்வல்பாக்ஷரமஸந்தி³க்³த⁴ம் ஸாரவத்” என்றுப்போலன்றோ வுள்ளது. நீதிமன்றங்களில் பலபேர்கள் ஜட்ஜ் ஸ்தானம் வஹிப்பதுண்டே; “இவர் எழுதிவைத்த ஜட்ஜ்மெண்டு எங்குப் போனாலும் மாறாது” என்னும்படியான ஏற்றம் எல்லா ஜட்ஜ்களுக்கும் கிடைத்து விடுமா? அப்படிப்பட்ட பாக்யசாலி யாரோ வொருவரன்றோ. அதுபோல மணவாளமாமுனிகள் ஸாதித்த நிஷ்கர்ஷமென்றால் “பேசியிருப்பனகள் பேர்க்கவும் பேராவே” என்று எம் ஆண்டாளருளிச்செய்தபடியன்றோ விருப்பது. பிறர் வளவளவென்று எத்தனைபக்கம் எழுதிவைத்தாலும் விசதவாக் சிகாமணிகள் எழுதும் ஒருவரியின்கீழே அத்தனையும் வழவழவென்றாகு மென்பது அபிமானத்தால் சொல்லுவதன்றே. இதில் தோஷம் சொல்ல நினைப்பவர்கள் “ஸித்தஸாதநம் தோஷ:” என்னலா மத்தனை போக்கி வேறொன்றும் சொல்லப்போகாது. இது நிற்க.

13. “த்ருட பூர்வச்ருதோ மூர்க்க: ...... என்கிற உலையாம்” என்றவிடத்தில்—“இப்படி மத்யஸ்த த்ருஷ்டியாலே ப்ராமாணிகார்த்தங்கள் தோற்றச்செய்தே பற்றினது விடாதொழியில்” என்றிருக்கிறதல்லவா; இதில் இரண்டு கேள்விகள். (1) மத்யஸ்த த்ருஷ்டியாலே பிராமாணிகார்த்தங்கள் தோற்றியிருப்பதாகச் சொல்லப்படுகிற அர்த்தங்கள் எவை? (2) பற்றினது விடாமல் பிறர் பிடிவாதமாகச் சொல்லும் அர்த்தம் எது? ஆக இவ்விரண்டு கேள்விக்கும் விடை வெளிவருமா? இந்த யுகத்தில் வெளிவராதென்று சபதம் செய்திருக்கிறார் காஞ்சீபுரம் ஸ்வாமி. அவரைத் தூக்கியெறிந்தாப்போல் பதில் எழுதவேணுமே யிவர்கள். “இப்படி மத்யஸ்த த்ருஷ்டியாலே” என்பதற்குக் கீழ் “வேரி மாறாத பூமேலிருப்பாள்—நின்திருவருளும் பங்கயத்தாள் திருவருளுங் கொண்டு—உன்திரு—திருவுக்குந் திரு—தாமரையாள் கேள்வனொருவனையே நோக்குமுணர்வு” இத்யாதிகளான ஆழ்வார் பாசுரங்களும் “ஶ்ரேயோ ந ஹ்யரவிந்த³லோசந—ஜக³த்³தே³ஹம் பதிவாம்ஶ ஸம்ஶ்ரயது—ஶேஷ ஶேஷாஶநாதி³ ஸர்வம் பரிஜநம்—ஸ்வஸ்தி ஶ்ரீரிதி ஶாஸ்தாஸ—வைஶ்வயம் த்வக்ஷாரமதிம்—ஸ்வத: ஶ்ரீஸ்த்வம்—” இத்யாதி ஆசார்ய ஸூக்திகளும், “ஐக்ஷ்வாகஸ ஹ்ருஷீகேஶ:—ப்ரவத்ருணிபத:

ஸ்ரீயஃ—ஸகலேஷா வஸித்ராதஃ—க்ஷவிஷ்ணவ தெவிக:—
இத்யாதிகளான பாஞ்சராத்ர புராணேதிஹாஸ ச்லோகங்களும்
மோர்ப்பொட்டு இடுங்கணக்கிலே அடுக்கப்பட்டிருக்கின்றன.
"ஸோஷவூடீ ஹஙவதி ஜயம் வடிகதயாதிஷஃ" "இவள்
புருஷகாரமாய்க்கொண்டு தஞ்சமாகிருள்" இத்யாதிகளைத் தாமே
யருளிச்செய்தபோது இந்தப் பிரமாணங்களெல்லாம் எங்கே புக்
கொளித்தனவோ? ஒருவர் விஷ்ணுபாரம்யம் சொல்லுவதாகத்
தொடங்கி "விஷ்ணுர் நாராயண: க்ருஷ்ண:" என்று அமரகாரன்
சொல்லியிருப்பதாலும் 'விஷ்ணவே ஸர்வஜிஷ்ணவே' என்றும்
"ஓம் நமோ விஷ்ணவே ப்ரபவிஷ்ணவே" என்றும் "ஸ்ரீமஹாவிஷ்
ணும் யஜாமி" என்றும் "விஷ்ணோராயதநே வஸேத்" என்றும்
"விஷ்ணுபாதே உத்தம்" என்றும் "வல்லனெம்பிரான் விஷ்ணுவே"
என்றும் முறையிடுகையாலும் விஷ்ணுவே பராத்பர னென்பதில்
என்ன ஸந்தேஹம்? விஷ்ணுவுக்குப் பாரம்யமில்லையாகில் 'விஷ்
ணும் தர்ப்பயாமி' என்று சொல்லித் தர்ப்பணம் பண்ணமுடியுமோ?
என்றும் இப்படி நினைவுக்கு வருவதையெல்லாம் சொல்லிக்கொண்
டிருப்பராம். அதனில் இதற்கு வாசியொன்றில்லையே. உண்டெனில்
உரையீர்.

14. "வேரிமாருத பூமேலிருப்பாள் வினைதீர்க்குமே" என்று
ஆழ்வார் ஸாதிக்கவில்லையென்று யார் சொன்னது? ஸ்ரீசப்தத்திற்
குள்ள ஆறுவகையான வ்யுத்பத்திகளில் "ஶ்ருணாதி நிகிலாந்
தோஷாந்" என்றிருப்பதை ஏனோவிட்டது? "ப்ரபத்யேஹம் பத:
ஸ்ரீயஃ" என்றதனாலே என்ன லாபம் கிடைத்து விட்டதோ?
"அக்ஷூம் ஶரணமஹம் ப்ரபத்யே" என்றதில்லையோ? எம்பெரு
மானுருடைய சரணுகதிகத்யத்தில் முந்துறமுன்னம் "ஹஙவநாரா
யணாபிக" என்று தொடங்கி "அசரண்ய சரண்யாம் அநந்யசரணச்
சரணமஹம் ப்ரபத்யே" என்று அநுஷ்டாந வாக்யமேயிருக்க இதை
விட்டு விதிவாக்யத்தைப் பிடித்துக்கொண்டு மெல்லுவது என்னே?
தாம் போகிற வழிக்கு மிகவநுகூலமான இந்த சரணுகதிகத்ய
ஸூக்தியை விட்டு "ஶேஷஶேஷாஶந" இத்யாதி ஸூக்தியில்
என்ன இருக்கிறதென்று அதை யுதாஹரித்தனரோ? இதெல்லாம்
தேசிகவாக்யங்களன்று என்று மஹர்ஷி வாஸுதேவாசாரியர்ஸ்வாமி
நிருபித்து முடித்திருக்கிருர்.

15. "ஸ்ரீஸூக்த பாஷ்யத்திலே பெரியஜீயரும் அபேக்ஷிதார்த்தங்களெல்லாம் உபபாதித்தார்" என்கிறார். என்ன அர்த்தம் அபேக்ஷிதமோ ? அதை எப்படி உபபாதித்தாரோ ? இஞ்சிமேட்டழகியசிங்கர் பெரிய வித்வான்; வியாக்கியானம் பண்ண இழிந்த அவராவது விவரிக்கவேண்டாமா ? நஞ்சீயர் ஸாதித்த ஸ்ரீஸூக்தபாஷ்யமென்று ஒன்று அச்சில் வந்திருக்கிறதே, அதை அந்த ஸ்வாமி கடாக்ஷியாதவரல்லரே. அதில் உபபாதித்த அபேக்ஷிதார்த்தங்களில் சிலவற்றையாவது எடுத்துக் காட்டக்கூடாதா ? ரப்பர் பாம்பைக் காட்டி மருளப்பண்ணுகிற கதையாயிருக்கிறதே. பெரியஜீயரும் என்பதற்கு "நாராயணமுனி யென்கிற நஞ்சீயரும்" என்று பொருளுரைத்தார். இதுதான் இங்கு அவசியமான விவரணம் போலும். அந்த நஞ்சீயர் என்ன உபபாதித்தாரென்பதை அடியோடு காட்டாமல் தாம் ஒரு அபூர்வமான ப்ரமாணம் காட்டி வெற்றிக்கொடி நாட்டுகிறார். அது என்னவென்னில்; "இங்கு 'ஸ்வயம் ஸ்வஸ்ய ச தவ ச து ... உபாய: ஸ்வஸ்ய ஸ்வாமினௌ நஶ்ஶரணம் து' என்று பட்டர் ஸ்ரீலக்ஷ்மீ கல்யாணத்தில் நம்மாழ்வார் பாசுரத்திற்கு அர்த்தமாக அருளிச்செய்த ஸ்தோத்ரத்தின் ச்லோகாதிகளும் அநுஸந்தேயங்கள். இதில் பெருமாளுடையவும் பிராட்டியினுடையவும் திருவடிகளுக்கு உபாயத்வம் ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டதிறே." என்றெழுதியுள்ளார் இஞ்சிமேட்டழகியசிங்கர். பிராட்டியை மட்டும் தனியே விளித்து உமது திருவடிகளை ஶரணமாகப் பற்றுகிறேன் என்று இட்ட சுலோகங்கள் பதினாயிரக்கணக்காக இல்லையா ? ஶ்ரீமந்நாராயணேத்யாதி ஶரணாகதிகத்ய சூர்ணையில் "ஶரணமஹம் ப்ரபத்யே" என்றிருப்பது ஒன்று போராதா உங்களுக்கு வெற்றிக்கொடி நாட்டுவிக்க ? ஸுப்ரஸித்தமானதை விட்டு அப்ரஸித்தமான தொன்றைத் தேடிப்பிடித்து ப்ரஸங்கிப்பது என்னே ? "இஞ்சிமேட்டு ஸிம்ஹஸ்வாமி சரணௌ ஶரணம் வ்ரஜே" என்றும் "நவநீத ஶௌரே: பாதௌ ப்ரபத்யே ஶரணம் ஸதா" என்றும் இங்ஙனே பதினாயிரம் சுலோகங்கள் பண்ணலாகாதோ ? இத்தகைய சுலோகங்களுக்கும் இவரெடுத்துக் காட்டுகிற சுலோகங்களுக்கும் எள்ளளவேனும் வாசியுண்டோ ? "ஶரணம் ப்ரபத்யே" என்னப்பெறுகிற வ்யக்திகளுக்கெல்லாம் மோக்ஷப்ரதத்வம் வந்துவிட்டதாக எண்ணமோ ? அவரவர்கள் தம் தம் ஆசாரியர்களுக்குச் செய்துகொள்ளும் தனியன்

களில் 'ஶரணம் ப்ரபத்யே' இல்லாத தனியன் தேடிப்பிடிக்க வேண்டியதாகவன்றோ விருக்கும். இவர்களெல்லோரும் மோக்ஷப்ரதர்களாகும்போது பிராட்டிதானு மோக்ஷப்ரதையாக ஆகக்கூடாது ?

16. இராமாநுச நூற்றந்தாதியில் "ஞானங்கனிந்த நலங்கொண்டு" என்கிற பாசுரத்தில் எம்பெருமானுடைய மோக்ஷப்ரதத்வத்தில் குறை கூறி எம்பெருமானாருடைய மோக்ஷப்ரதத்வத்தில் வெகு அதிஶயம் விளக்கப்பட்டிருக்கிறது. ஸுஸ்பஷ்டமாக விளக்கப்பட்டிருக்கிறது. அதை யாராவது ஆக்ஷேபிப்பாருண்டோ? பிராட்டி மோக்ஷமளிக்கிருளென்ருல் இதில் என்ன ஆக்ஷேபமையா? இதற்கொரு பாரதம் வேணுமா? விஷயமின்னது என்று புரிந்துகொள்ளாமலே மூலங்களும் வியாக்கியானங்களும் ஜஞ்ஜாமாருதமாக அவதரிக்கின்றனவே! "த்வாதசியன்று ஸூர்யக்ரஹணம் பிடித்தால் பாரணை முன்பா ? தர்ப்பணம் முன்பா? என்று விசாரம் செய்வதும், அதற்கு ஸஞ்சிகைகள் எழுதுவதும் போலே யிருக்கிறதே" என்று காஞ்சீபுரம் ஸ்வாமி ஒரு நூலில் எழுதியிருந்தார். அதைப் பலர் நினைத்து நினைத்து வயிறு குலுங்கச் சிரிப்பதுண்டு. மோக்ஷப்ரதானத்திற்கு பிராட்டி புருஷகாரக்ருத்யம் செய்வதுண்டா இல்லையா ? என்பது ஒரே கேள்வி. இல்லையென்று வாய்திறக்க முடியாது. அவள்தானே கொடுக்க ஶக்தையாயிருந்தால் கொடுக்கத் தடையென்ன? தண்டதரனிடத்தில் மன்ருடித் திண்டாடி நிற்பது எதற்காக? இவ்வொரு சிறு விஷயத்தை ஆராயமாட்டாமல் என்ன கந்தபுராணம் எழுதுகிறீர்களையா! திவ்ய தம்பதிகளான இருவர்க்கும் துல்யாதிகாரம் என்னவந்தாரொருவர். இருவர்க்கு மட்டுமன்று காணும், நியாஸதிலகத்தில் "த்வந்த்வம் நிஜகவி வடம் தேஶிகா தேஶகாம்க்ஷீ" என்று தேசிகரே சொல்லியிருக்கையாலே ஆசாரியர்களுக்கும் சேர்ந்தே அதிகாரம். நீர் ஒருவர்க்கு ஆசார்யரானுல் நீரும் சேர்ந்து கையெழுத்திட்டாக வேண்டும். மோக்ஷமென்பது ஜாயண்டு ப்ராபர்ட்டிகாணும். விஷயம் புரிந்ததா ?

17. இந்நூலில் இவ்விஷயத்தை நான் இவ்வளவு விஸ்தாரப்படுத்துவதன் கருத்தைக் கேளீர். தேசிகர் தேங்காயுடைத்தாற்போல் பல பல அர்த்தங்களை யெழுதியுள்ளார். அவையெல்லாம் காஞ்சீபுரம் ஸ்வாமியின் பல நூல்களில் (முக்கியமாக) தேசிகஹ்ருதயத்தில் மிக விசதமாகவும் விரிவாகவும் விளங்குவதால் இங்கு நான் அவற்றை

விவரிக்க அவசியமில்லை. சுருக்கமாகக் கேளீர்; தேசிகருடைய ஸ்ரீஸூக்திகளால் நன்கு நிலைநாட்டப்பட்ட அர்த்தங்களை வரிசையாக எழுதுகிறேன்; இவற்றில் ஒன்றுகூட உங்களுக்கு உடன்பாடன்று; ஒவ்வொன்றையும் நீங்கள் மறுப்பவர்களே என்பது சிலாலிகிதம். மறுக்கவில்லோமென்னில் க்ஷேமமாய.

18. தேசிகர் ஊர்ஜிதமாக ஸ்தாபித்த அர்த்தங்கள்.

(1) பகவத்க்ருபை நிர்ஹேதுகம். (2) சேதனனைப் பெறுவது ஈச்வரனுக்குப் பேறு. (3) பரமத ஸ்வீகாரமே நன்று. (4) ப்ரபத்தி உபாயமன்று. (5) பிராட்டிக்குப் புருஷகாரத்வமே யுள்ளது. (6) பிராட்டிக்கு ஜகத்காரணத்வமில்லை. (7) பிராட்டிக்கு ஜீவகோடி ப்ரவேசவாதம் மறுக்கத்தக்கதன்று. (8) எம்பெருமானுடைய வ்யாப்தி வஸ்துதோறும் பரிஸமாப்ய வர்த்தநம். (9) ஜாதி நசிக்கும். (10) உபாயாந்தரங்கள் ஸ்வாதிகார விருத்தம். (11) த்வயோச்சாரணுச்சாரணத்தாலே ப்ரபத்த்யநுஷ்டானம் பிறந்து விட்டது. (12) நாஸிகாஸம்பந்தமற்ற திருமண்காப்பு அசாஸ்த்ரீயம்.

ஆக இவ்வர்த்த விசேஷங்கள் தேசிகருடைய க்ரந்தங்களில் பேர்க்கவும் பேராதபடி விளங்குமவை. இவை உங்களுக்கு விஷமாயிருக்கின்றன. கைவல்ய விஷயத்தில் கீதாபாஷ்ய ஸ்ரீஸூக்திகளில் அஸ்வாரஸ்ய மேறிட்டும், பிராட்டியின் விஷயத்தில் தாமே பலவிடங்களில் கல்வெட்டாகக் கூறின விஷயங்களைக் கண்டிக்கிற ரீதியில் ‘‘த்ருஶ்ய வாக்யம் ஶ்ருதோ புத்யா:’’ இத்யாதிகளான உபாலம்பங்களை அஸ்தானே பரப்பியும், பகவத் வ்யாப்தி விஷயத்தில் நியாய ஸித்தாஞ்ஜனத்தில் நிஷ்கர்ஷித்தபடிக்கு முரணாக ரஹஸ்யத்ரய ஸாரத்தில் எழுதி வைத்தும் ... ... இப்படியாகவுள்ள ஸ்வல்ப விஷயங்களைக் காணுக்கண்ணிட்டிருக்க வேண்டியிருக்க, கடுகான விவற்றை மலையாக்கிக்கொண்டு அதிபல்பஜமான இவ்விஷயங்களைக் கொண்டு ‘நாங்களே தேசிக ஸம்ப்ரதாயஸ்தர்கள்’ என்று கூசாமல் கூறுகின்றீர்கள். ‘‘உலகோ உறங்குமே!’’

19. ‘‘ரங்கஸ்தாநே ரஸிகஜநபரிஷத் ரஞ்ஜிதா ஶேஷவித்யே விததத்வா விஜய ஜநஸா வேங்கடேசேந’’ என்று தேசிகர்தாமே தாம் திருவரங்கம் பெரியகோயில் சென்று சேர்ந்து ரஸிகவித்வான்

களை ஸேவித்து விமலமாநஸ்கராகப் பெற்றதைக் கூறியிருப்பதைக் கணிசியாமல் விஞ்ஞன அட்டஹாஸங்களால் சில பாமரர்களை மயக்கிக் கொண்டிருப்பதோடு நில்லாமல் நிஷ்ப்பலமான போராட்டங்களை வளரச்செய்துகொண்டும் போவது அழகன்று, உசிதமன்று, நியாய மன்று, யுக்தமன்று என்பதை ஹிதபரதையுடன் உமக்கு உணர்த்தி நிற்கின்றேன். “न नस्यार्थेऽपेक्ष्यं भूतीत्वं शरणं मया”

20. இன்னும் வக்தவ்யங்கள் அளவுகடந்திருக்கின்றன. இவற்றுக்கு நீர் ஏதாகிலும் விடையிறுத்து, அதற்கு நாம் பதிலெழுத ப்ராப்தமானுல் அப்போது நிச்சேஷமாகப் பல மருமங்களைத் தெரிவிக்க நேரும். அப்போதுதான் உலகுக்கு பாக்கியம் பரிபக்குவமாகும். ... ...

பேய்க்குப் பேய்பேசினபோல் பேணுமற் சொன்னதல்ல
வாய்க்கும் வாய்ப்பொருளின்பம் வாசகந் தோறளித்தமையால்
தாய்க்குந் தாய்மந்திரத்தின் சாரமென நன்குணர்ந்து
நோக்கும் நோக்குடையார்கள் நுட்பமதாத் தெளிகுவரே.

ஸ்ரீவில்லிபுத்தூர் வித்வான், விஞ்சிமூர்

ஸ்ரீநிவாஸாசாரியர்ஸ்வாமி எழுதிய

நவநீதராம நவநீதம்

முற்றிற்று.